
# கால்வாய் வெட்டிய
# காலிங்கராயன்



(அமரர்) அகத்தூர் முத்துராமசாமிக் காளிங்கராயர்

# கால்வாய் வெட்டிய காளிங்கராயன்

ஆசிரியர் :
"ஈரோடை தமிழ்மணி"
**சு. தங்கவிநாயகம்**
உதவி ஆசிரியர்
மதுக்கரை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி
கந்தேகவுண்டன்சாலை
மதுக்கரை வட்டாரம்—கோவை.

வெளியீடு :

பாரதிப் பித்தன் பதிப்பகம்
பிச்சானூர் அஞ்சல்
மதுக்கரை வழி :: கோவை.

முதற் பதிப்பு 1972

உரிமை ஆசிரியருடையது

முத்துநாராயணன் அச்சகம், ஈரோடு-1.

# அணிந்துரை

தமிழ்ப்பெரும் புலவர் — பேராசிரியர்
சரவண ஆறுமுக முதலியார், M. A., B. O. L., L.T.
(ஓய்வுபெற்ற) தமிழக அரசுக் கல்வித்துறையாளர்
முதல்வர்
ஸ்ரீ பழனியாண்டவர் கீழ்த்திசை பண்பாட்டுக் கல்லூரி
திண்டுக்கல் சாலை, பழனி, (மதுரை மாவட்டம்)

தமிழ்நாடு, நிலவளமும், குடிவளமும் நிறைந்தது. மேலும் குளம் தொட்டு வளம் பெருக்கினன் திருமா வளவன். இம்மன்னர்பிரான் காவிரியில் கல்லணைகட்டிப் புகழ்பெற்றவன் அதன் கிளையாருகிய பவானி, காவிரி யுடன் சேரும் இடத்திற்கு சற்று அருகாமையில், ஓர் அணையைக் கட்டிக் கால்வாய் வழியாகப் பல கல் தொலைவுவரை பல்லாயிரம் காணிநிலங்களுக்கு நீர்பாயும் கால்வாயை வெட்டினன் காளிங்கராயன் என்னும் குறு நிலமன்னன்.

இப்பகுதியில், செந்நெல்லும், கரும்பும், மஞ்சளும் இஞ்சியும், தெங்கும் கமுகும், காய்கனி கிழங்குகளும் பொலிவுற்று விளங்குகிறது. ஈரோடை-திருச்சி புகை வண்டிப்பாதையின் இருமருங்கிலும் ஈரோடை - நொய்யல் வரை இக் கண்கொள்ளாக் காட்சியைக் காணலாம்.

இக்கால்வாயைவெட்டிய காளிங்கராயன் வரலாற்றை திரு. சு தங்கவிநாயகம் நல்லமுறையில் எளிய, இனிய செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார்.

இவர் கலைபயில் தெளிவும், கட்டுரை வன்மையும் கல்வித்தொண்டில் ஆர்வமும்உடையவர். இந்நூல் தமிழ் மக்களுக்கும், தமிழ் மாணவர்கட்கும் பெரிதும் பயன் படும் என்று நம்புகிறேன்.

சண்முகபுரம்-குடியிருப்பு
திண்டுக்கல் சாலை, பழனி

சு. ஆறுமுக முதலியார்
25—4—1965

# அணிந்துரை

# நாமகள் நலம் தருக!

கவிஞர் 
வித்வான் வி. துரைசாமி, M. A.,
தலைமைத் தமிழாசிரியர்

ஈ. ஆர். உயர்நிலைப்பள்ளி
சிந்தாமணி
திருச்சிராப்பள்ளி-2.

கொங்கினிற் றோன்றிய கொற்றகக் குரிசில்
மங்காச் சீர்த்தி தங்கிடும் செல்வன்
சூளொன்று புகன்றுவாய்க் காலொன்று வகுத்த
காளிங்க ராயன் கனகமணி மார்பன்
பொட்டலாம் நிலமெலாம் பட்டொளி வீசிடத்

திட்ட மிட்டமைத்த தேனோடு கால்வாய்
வந்த விதத்தினை வகைபெறச் சொல்லும்
விந்தைக் கதையினை விளம்பும் பண்பன்
தகைமை சான்ற தங்க விநாயகன்
பகைமை அறியாப் பால்போலக் குணத்தினன்

தமிழின் மாட்டுத் தனித்த பேரன்பன்
எழுதிய நூலிதை எவரும் படித்து
வழுவிலா வாய்க்கால் வகுத்த வள்ளலை
உளத்தால் உவந்தே உண்மையைப் போற்றுவம்!
வளத்தால் ஓங்கும் வண்மையை நினைந்தே!!

குடியிருப்பு :
17, வடக்குமலைக் கோட்டை
திருச்சி-2

கவிஞர் வி. துரைசாமி
15—5—1965

# அணிந்துரை

வித்வான் பெ. அருணாசலம்
தலைமைத் தமிழாசிரியர்,
ஸ்ரீ சங்கரவித்யாசாலா
ஆண்கள் உயர்நிலைப்பள்ளி
திருப்பாண்டிக் கொடுமுடி
ஈரோடு வட்டம் (கோவை மாவட்டம்)

'நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு'

என்பது வள்ளுவர் வாய்மொழி.

நாடென்று கூறினால் தன்கண் உள்ள உழவர்கள் வருந்தி உழைக்காமல் நல்ல விளையுளைத் தருவதாகும். வருந்தி உழைக்க வளந்தருவது நாடல்ல என்பது இதன் பொருள். இவ்வகையில் நம் கொங்குநாடு முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் பரந்த நல்ல நாடாகும். தேனும், தினையும் செழித்துச் சிறந்த உணவாய் மக்கட் களித்தமையால் இது கொங்கெனப் பெயர் பெற்றது. காடும், மலையும், கவினுற விளங்கிய நாடு இது. அதிகமான் போன்ற அரசர்களால் ஆளப்பட்ட சிறப்புடையது. ஔவையார் போன்ற அருந்தமிழ்ப் புலவர் பாக்களால் அணி செய்யப்பட்ட நாடு பாமணிகள் பலர் தோன்றி தமிழ் வளர்த்த பெருமை இதற்கே உரியது.

இந்நாட்டில் பண்டு மருத நிலவளப் பகுதி மிகவும் குறைவாகவே இருந்தது. இக்குறை நமது மேலோர்கள் செய்த நல்வினைப் பயனாய்த் தோன்றிய காளிங்கராயன் என்பவரால் நீங்கிற்று. அப்பெருந்தகையின் வாழ்க்கைக் குறிப்பும்,கால்வாயின் வரலாற்றுக் குறிப்புமாக ஆசிரியர் இதன்கண் தாம் கேட்ட கன்னபரம்பரைச் செய்திகளையும், கண்ட சிலபல நல்ல கருத்துக்களையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் திரு. சு. தங்கவிநாயகம் அவர்களின் இந் நன்முயற்சி பாராட்டற்குரியது. மக்கள் இதனைப்போற்றி அவர் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவார்களாக!

பெ. அருணாசலம்
23—5—1965

## கால்வாய் வெட்டிய

# காளிங்கராயன்

## என்னுரை

மெய்யன்பரீர்! அன்பு கனிந்த கைகூப்பு.

உங்கள் கரத்தில் தவழும் இந்நூலை எழுதுவதில் தோன்றாத் துணையாய், என் உள்ளத்தின் ஊற்றாய், அருவமாய் நின்று அருட்கருணையுடன், உள்ளுணர்வூட்டி எனக்கு வழிகாட்டிய அருட்பெருஞ்சோதியை நினைந்து வணங்கி, வாழ்த்தி எழுதத் தொடங்குகிறேன். எழுதி முடித்ததையும் உங்கள்முன் படைக்கிறேன் இப்படையலின் சுவையைப்படித்தறிபவர்கள் நீங்கள்தானே! இதில் குற்றங்களைந்து குணங்கொள்ள வேண்டுகிறேன். அறியாமையால் ஏதேனும் தவறுதலாகப் பிழைகளும் நேர்ந்திருக்கவும் கூடும். அறிஞர் உலகம் அவற்றை பொருத்து, குணம் நாடி, பிழை சுட்டின் அவற்றை நன்றியுடன் ஏற்று மறு பதிப்பில் திருத்தி வெளியிடப்பெறும்.

இந்நூல் கொங்கு நாட்டில் குறிப்பாக கோவை மாவட்டம் ஈரோடு,பவானிவட்ட மக்கள் ஒவ்வொருவரும் தவறாது அவசியம் படித்தறிய வேணடியது நம் கொங்குநாட்டிலுள்ள கவுண்டர் எனும் கொங்கு வேளாள சமூகத்தினருக்குத் தலைவரும், தந்தை போல்வரும் ஆவர், பழையகோட்டைப் பட்டக்காரர் திருமிகு மன்றாடியார் குடும்பம். அக்குடியில் தோன்றியவர் அனைவருமே அன்று முதல் இன்று வரை, புலவர்களையும், சிறுகுடி மக்களையும், ஆதரிப்பதில் புகழ் மிக்கவர்கள். இது பற்றிய பல சுவைமிக்க செய்திகளைக் கேட்டும் படித்துமிருப்பீர்கள். நிற்க!

அக்குடியில் உதித்தவரும், காலஞ்சென்ற இராவ்பகதூர், நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியாரின் குமாரத்தியும் அமரர் திரு. **A M R** காளிங்கராயரின் அருமைத் துணைவியும் கற்புக்கரசியுமான திருமிகு. ருக்மணியம்மையார் அவர்கள் இந்நூலுடைத் தலைவரின் வழி வந்தவர். அதே போல் முன்னாள் தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சரும், பழையகோட்டை தற்

போதைய பட்டக்காரருமான திருமிகு. நல்லசேனபதிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களின் துணைவியார் அவர்களும் இந்நூலுடைத் தந்தையின் வழித் தோன்றலான அருள்மிகு அமரர் A M R காளிங்கராயரின் அன்புச் சகோதரியும் ஆவார்கள்.

இவர்களின் பெயர்களின் இறுதியில், காளிங்கராயர் என்ற பட்டம் சேர்த்தே வழங்கப்பெறும். காளிங்க 'தர்த்தனம்' என்ற சொல்லை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவ்வழியில் வந்த இவர்கள் குறுநில மன்னர்களாய் நாட்டை பன்னெடுங்காலம் அரசாண்டதால், ''இராயர்'' என்ற பட்டத்துடன் வழங்கலானார்கள். ''இராயர்'' என்ற சொல்லுக்குத் தலைவன் என்பதுவே சரியானபொருள். கொங்குநாட்டின் பெருங்குடி வேளாளர் சமூகத்தின் தலைவர் ஆதலாலும், காளிங்கனது வம்சத்தில் உதித்ததாலும் ''காளிங்கராயர்'' என்ற பட்டத்தை இவர்கள் பெற்றுள்ளனர். ஒவ்வொருவரது பெயரின் இறுதியிலும் இப்பட்டத்தின் சொல்லையும் சேர்த்தே வழங்க படுகிறார்கள். இந்நூல் ஒரு சுவையான வரலாறு ஆகும். தற்போது கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி வட்டத்தில் 'ஜமீன் ஊத்துக்குழி' என்ற பெயர் கொண்ட ஒரு அழகான கிராமம் உண்டு. இவ்வூர் பொருள் ஆட்சி மிகுந்த பொள்ளாச்சி நகரிலிருந்து சுமார் இரண்டு கல் தொலைவு கிழக்கில் அமைந்துள்ளது. அவ்வூர் செல்ல பொள்ளாச்சியிலிருந்து நகரப் பேருந்துகளும் உண்டு. இவ்வூர் அக்காலத்தில் ''ஊர் எனப்படுவது உரந்தை'' என்ற முறைப்படி ஊரெனப்படுவது ஊத்துக்குழியே என்று யாவரும் மெச்சும் வகையில் இயற்கையழகு நிறைந்த நிலவளம், நீர் வளம், பொருள் வளம் அருள் வளம், மிகுந்த நல்ல இன்பச் சூழலில் இனிதேயமைந்துள்ளது. இவ்வூரில் பண்டைக் குறுநில மன்னர் திலகமான காளிங்கராயரின் அரண்மனையும், அவர் புகழ் தாங்கி நிற்கும் உயர்நிலைப்பள்ளியும், ஏரியும், சோலைகளும், சுனைகளும், மலைவளமும் கண்டின்புறத்தக்கவையாய் அம்மன்னர் பிரானால் உண்டாக்கப்பட்ட அகத்தூர் அம்மன் கோவிலில் அவர் செய்த பல அழியாக்கொடைகளின் சாசன (கல்வெட்டுக்களும்) அவரது புகழைப் பறைசாற்றுகின்றன.

எனவே இந்நூலின் அட்டையில் விளங்குபவர் நம் பெருமதிப்புக்குரிய இந்நூலுடைத் தந்தையின் வழித் தோன்றலாகிய வள்ளல் அமரர் அகத்தூர் முத்துராமலிங்கக் காளிங்கராயர் அவர்களின் திருவுருப்படமாகும். இவரை அன்போடு யாவரும் A. M. R. காளிங்கராயர் என்றே வழங்குவர். இவர் இந்நிலவுலகை விட்டுப்பிரிந்து சென்ற இரண்டாம் ஆண்டு

நிறைவு நன்னாளாகிய இப்புனித நாளில் அவர்களது திருவுருவப்படம் இந்நூல் அட்டையில் தாங்கி வெளிவருவது மிகவும் பொருத்தமானது. இந்நூல் வெளிவரத் தோன்றாத் துணையாயிருந்தவரும் அவர்களே யாவர். அவர்கள் உயிரோடு இருக்கும்போது இந்நூலை எழுத அவர்கள் பலவகையிலும் உதவினார்கள். அவர் வம்சம் கோவை-ரேஸ்கோர்ஸ் பகுதியில் அமைந்த ஊத்துக்குழி இல்லத்தில் நான் அவர்களை முதன் முதலில் சந்தித்தேன். புன்முறுவலுடனும், உள்ளன்புடனும் வரவேற்றார்கள். உண்டி முதலியவற்றுடன் உபசரித்து தங்களிடமிருந்து ஜமீன் வம்சச் சரிதம் என்ற அவர்களின் வமிச நூல் ஒன்றையும் கொடுத்துக் குறிப்பெடுக்க உதவினார்கள். (The ruling Chiefs and Zamindars of India by J. M. Vadivel Pillai) என்ற நூல் அது. மேலும் கன்ன பரம்பரைச் செய்திகள் சிலவற்றையும் கூறி உதவியதுடன், தங்கள் பரம்பரையினர் வாழ்ந்த பொள்ளாச்சியை அடுத்த ஊத்துக்குழிக்கு வருமாறும் அழைத்தார்கள். ஆங்கு இருநாட்கள் அவர்களின் அரண்மனையில் தங்க வசதி செய்தார்கள். அப்போது அகத்தூர் அம்மன் கோவிலில் இருந்த கல்வெட்டுக்கள், ஊத்துக்குழியில் அவர்களின் அரண்மனையருகில் அமைந்த வீர நாராயணப்பெருமாள் கோவிலில் இருந்த கல்வெட்டுக்கள் ஆகியவற்றைக் கவனமாய்ப் படித்தேன். அரண்மனை நூல் நிலையத்தில் அவர்களின் முன்னோர் வெளியிட்டுச் சென்ற தமிழ் வரலாற்றுச் சுருக்க நூல் ஒன்றையும் பார்த்தேன். அதிலும் சில பல குறிப்புகளும் எடுத்தேன். நூலின் சுருக்கத்தை அவ்வூர் காளிங்கராயர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் பேசவும் அப்பள்ளித் தலைமை ஆசிரியர், மதிப்புக்குரிய திரு. சண்முகசுந்தரனார் B.A.,B.T. அவர்கள் அன்போடு அழைத்தார்கள்.

மேலும் நான் இளமையில் இக்கால்வாய்க் கரையருகில் அமைந்த ஊரில் கொளாநல்லி-செர்மாண்டம்பாளையத்தில் (ஈரோடை-கொடுமுடிப் பாதையில் அமைந்த கிராமத்தில்) வாழ்ந்தவன். அப்போது, அவ்வூரில் வாழ்ந்து வந்த சாத்தந்தை கோத்திர வேளாண் குடிமக்கள் பலர் தாங்கள் இக்கால்வாயின் நீரை அருந்தாமலும், அதில் விளைந்த நெல்லில் ஆன அரிசி உணவை உண்ணாமலுமிருப்பதைக் கண்டேன். அதற்கான சபதத்தின் விளக்கத்தையும் அவர்கள் உணர்வோடு கூறக் கேட்டேன். இந்த விந்தைச் செய்தி என் உள்ளத்தை மிகவும் தொட்டது. எனவே அந்நாள் முதல்-என் பதினைந்தாவது ஆண்டு முதல் இந்நாள் வரை (49 வயது) இக்கால்வாயின் வரலாறு பற்றிய

பல கோணங்களில் நான் கேட்ட கன்னபரம்பரைச் செய்திகளை எல்லாம் ஒன்று சேர்த்துத் தொகுத்து வைத்தேன்.

1965ஆம் ஆண்டில், ஈரோட்டில், தமிழ்ப் பேரவையில் என் மதிப்புக்குரிய நண்பர், புலவர்மணி செ. இராசு அவர்களின் இக்கால்வாய் வரலாறு பற்றிய சுவையான பேச்சு, மேலும் என்னை இம்முயற்சியில ஈடுபட ஊக்கம் அளித்தது.

அதே 1965ஆம் ஆண்டில் திருப்பராய்த்துறை, இராமகிருஷ்ண தபோவனம் அதிபர் அருட்திரு சுவாமி சித்பவானந்தா அவர்களின் அந்தர்யோகம் ஒன்று இக்கால்வாயின் அணைத்தோப்பில் நடந்தது. ஆங்கு சென்றபோது அணைத்தலைப்பு முகத்தோற்றம், வழி காட்டிய பாம்பின்சிலை ஆகியவற்றின் நிழற்படங்களை எடுத்தேன். அக்கால்வாயின் தலையில் அமைந்த அணையில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலகத்தில் பல குறிப்புகளும் விளக்கமான தகவல்களும் கேட்டெழுதி வைத்தேன். அந்த அணைப்பகுதியில் அமைந்த ஊரான காளிங்கராயன்புதூர் என்றகிராமத்தின் கணக்கப்பிள்ளையும், என் பழைய இனிய நண்பருமான கருப்புச்சாமி என்பவர் துணைகொண்டு அவ்வூர் மூதறிஞர் பலரிடம் சென்று கன்னபரம்பரையான சுவைமிகுந்த பல செய்திகளையும் சேர்த்தேன்.

நான் படித்த கொங்குமண்டல சதகம், திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை, சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழ், தனிப்பாடல்கள் மூலம் காளிங்கராயன் சம்பந்தப்பட்ட பல பாடல்களும் கிடைத்தன. மேற்சொன்ன அனைத்தையும் ஒன்று சேர்த்து என் சிற்றறிவுக் கெட்டிய வகையில் இணைத்தும், பிணைத்தும், இழைத்தும், குழைத்தும் எழுதி முடித்தேன். அவ்வப்போது பல தமிழறிஞர்களையும் அடுத்து, அவர்களின் கருத்துரையையும் அன்போடு பெற்று, (அவ்வாறு) பேரூர், சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி இலக்கணப்புலி, மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் - கந்தசுவாமி பிள்ளை; கோவை ... ார் இராவ் பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L., அவர்கள், சென்னைப் பல்கலைக் கழக தமிழறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனர் M. A., M.O L., L.T., P.H.D. அவர்களிடமும் காட்டி சில பல திருத்தங்களை ஏற்றவிடத்தில் பெற்றேன்.

எல்லாம் முடித்தபின் பழனி சென்றபோது தமிழ்க் கடவுளாம் முருகப்பெருமானின் திருவடிகளில் வைத்துப் பூசித்து வந்தேன். மலையினின்று கீழ்வந்தவுடன் திண்டுக்கல் சாலையில், சண்முகபுரம் குடியிருப்புக்குச் சென்றேன். ஆங்கு வாழ்ந்த என் மதிப்புக்குரிய ''தமிழ்ப்பெரும் புலவர்'' சரவண ஆறுமுக முதலியார் M.A., B.O.L., L.T. அவர்கள், பழனியாண்டவர் கீழ்த்திசைப்பண்பாட்டுக் கல்லூரியின் முதல்வராய் விளங்கினார்கள். அவர்களிடம் நூல் முழுதும் படித்துக் காட்டி ஒரு அணிந்துரையும் பெற்றேன். பின்னர் திருச்சி சென்று ஆங்கு E. R. உயர்நிலைப்பள்ளியில் தமிழ்ப் பணி புரியும் நண்பர் கவிஞர், வித்வான் வி. துரைசாமி M.A., அவர்களிடமும் காட்டி ஒரு அணிந்துரைக் கவிதையும், திருப்பாண்டிக் கொடுமுடி, திரு. சங்கரர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியின் தலைமைத் தமிழாசிரியர் நண்பர் திரு. வித்வான், பெ. அருணாசலம் அவர்களிடம் காட்டி மற்றொரு அணிந்துரையும் பெற்றேன்.

எல்லாவற்றையும் முடித்து வைத்து ஆறு ஆண்டுகள் முடிந்த பின்னரே இதற்கு ஏற்ற நல்ல காலம் வரத் தொடங்கியது. ஊத்துக்குழி ஜமீன்தாரணி அம்மையார் காலஞ்சென்ற (அமரர்) A. M. R. காளிங்கராயர் அவர்களின் இல்லத்தரசியரின் கருணை உள்ளம் இதன் பால் திரும்பியது, நான் பெற்ற பெரும் பேறு. அவ்வம்மன் அவர்கள், இந்நூல் முழுவதையும் கவனத்துடன் படித்து ரசித்து, இதை அச்சிடுவதற்கான முழுத்தொகையையும் அன்போடு வழங்கியுதவிய வள்ளன்மை மிகவும் பாராட்டற்குரியது. அன்னாருக்கு எல்லா நலனும், வளமும், பெருக இறைவன் திருவருள் செய்வானாக!

மேலும் இதைஅச்சிட்டு வெளியிட அனுமதி வழங்கிய மதுக்கரை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. L. S. நடராசன் அவர்கட்கும், மிக அழகியவடிவில் அச்சிட்டுக்கொடுத்த ஈரோடு முத்து நாராயணன் அச்சகத்தாருக்கும், இதை வாங்கி வாசிக்கும் உங்கட்கும் என் அகங்கனிந்த நன்றியையும் கூறி விடைபெறுகிறேன்.

இன்பமே சூழ்க! எல்லாரும் வாழ்க !!

சு. தங்கவிநாயகன்
24—6—72



அமரர் இராமசாமிக் காளிங்கராயர் (38-ஆம் பட்டம்)

# படையல்

தந்தை அமரர்

ஆ. சுப்பிரமணியபிள்ளை, அவர்கட்கு

பேச்சடங்கு மட்டும் முருகன் பெயர் சொன்னான்
மூச்சடங்கு மட்டும் நெஞ்சில் முன்னினான் — பூச்சடலம்
போக்கு அவன்அடிக்கே புக்கான்என் தந்தை அவர்கட்கு
ஆக்கினன் இந்நூல் படையல் அவர்க்கே



நூலாசிரியர்
'கரோடைத் தமிழ்மணி'
க. தங்கவிநாயகம்

# கால்வாய் வெட்டிய காளிங்கராயன்

## 1. நம் தமிழ்நாடு

நாம் வசிப்பது தமிழ்நாடு. இது மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தது. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூப்புடைய தமிழ்மொழியைத் தாய்மொழியாய்க் கொண்ட நிலப்பரப்பு. இங்கு நிலவளம், நீர்வளம், பொருள் வளம், அருள் வளம் முதலிய பல் வகைச் சிறப்புக்களும் உண்டு. பண்டு தொட்டு கவிஞர் பலரும் இதன் பெருமையையும், தமிழ்மொழியின் சீர்மையையும் பலரும் அறிய தங்கள் அருங்கவிதைகள் மூலம் பாரெங்கும் பறைசாற்றினர். இதனாலேயே நம் அமரகவி பாரதியும்,

1 செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே — என்றும்

2 வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு —என்றும்

உயர்ந்த தம் உணர்ச்சிப் பெருக்கால் பாடி மகிழ்ந்தார்.

தமிழ்நாடு நீர்வளம் மிகுந்துள்ளது என்பதற்குச் சான்றாக அதே அமரக்வி பாரதியார் செந்தமிழ் நாடு என்ற தலைப்புள்ள தம் அடுத்த பாடலில் தமிழக ஆறு களைப் பற்றிப் பாடுகிறார்.

காவிரி, தென்பெண்ணை பாலாறு தமிழ்
கண்டதோர் வைகை பொருனை நதி என
மேவியஆறு பலவோடத் திரு
மேனி செழித்த தமிழ்நாடு

எனவே தமிழ் நாட்டின் நீர்வளம் மேற்கண்ட ஆறுகள் மூலம் புகழ்ந்து பேசப்படுகிறது. "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்ற முதுமொழியும் ஆற்றின் இன்றியமையாமையை வலியுறுத்துகிறது. ஆற்றிற்கழகு அதனிடம் நீர் நிரம்பியிருந்தலாம். நீர் ஓட்டமும் தூய்மையும் கண்ணுக்கும், கருத்துக்கும் அழகு தரும். செல்வச்செழிப்பும், மக்கட் பண்பும், சிறந்து விளங்குமிடம் இதுவே.

இதனையே கவிச் சக்ரவர்த்தி கம்பர் தம் சோறுடைத்த சோணாட்டின் வளத்தைப் புகழ்ந்து பாடுகையில்

"தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துன்சோழ மண்டலமே!

என்று நெற்களஞ்சியமாம் தம் சோழ வள நாட்டைச் சிறப்பிக்கிறார்.

தமிழகத்து ஆறுகளில் தலைசிறந்தது காவிரியாறு. இதைப் பொன்னி என்றும் கூறுவர். வடநாட்டில் புனிதமான கங்கையாற்றினும் புனிதமானது என்று ஆழ்வார்களால் புகழப்படுகின்றது. இதன் நீர்ப்பெருக்கால் புனல் பரந்து பொன்கொழிக்கும். வயல்களில் வளம் சிறக்கும். கருத்தில் உணர்வும் அனுபவமும் ஓங்கும். தமிழ்மூதாட்டி ஔவைப் பிராட்டி யாரும் நல்ல நாட்டின் தன்மைகளை ஆங்கு வாழும் மக்களின் தன்மையிலிருந்தே முடிவு செய்யலாம் என்பதைப் பின்கண்ட கவிதையால் பாடுகின்றார்.

நாடாகொன்றோ காடாகொன்றோ
அவலாகொன்றோ மிசையாகொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நலனே!

இதன் பொருள் :— அறிவுடைய மக்கள் வாழுமிடமே நல்ல நாடாகும். எனவே ஒரு நாட்டின் பெருமைக்

குக் காரணம் ஆங்குவாழும் மக்களின் பண்பைப் பொருத்தது. மேலும் அன்பு, அறிவு, ஆற்றல் முதலியவற்ருல் மக்களின் சிறப்புத் தெரியப்படுகிறது.

இப்படிப்பட்ட பண்பும், அன்பும் நிறைந்த ஆற்றல் மிக்க பழங்குடிகள் பண்டுதொட்டு வாழ்ந்த இடம் தமிழகத்தின் ஒரு பகுதியான கொங்கு நாடாகும். இங்கு தேன் மிகுதியாகக் கிடைப்பதாலும், தேன் போன்ற இனிமையான குணம் படைத்த மக்களின் குடியிருப்பாதலாலும் இது இப்பெயர் பெற்றது போலும். எனவே அடுத்த அத்தியாயத்தில் கொங்கு நாட்டைப் பற்றிச் சற்று விரிவாகக் காண்போம்.

## 2. கொங்கு நாடு

பண்டைத் தமிழகம் ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. அவைகளும் முறையே நாடு என்ற பெயர்களால் முடியும். முறையே 1. சோழநாடு 2. சேர நாடு 3. பாண்டிய நாடு 4. நடு நாடு 5. தொண்டை நாடு 6. கொங்கு நாடு என்பன. அவற்றில் கடைசியில் கூறியதும் இதர நாடுகளுக்கெல்லாம் வழிகாட்டியாயுள்ள நம் கொங்கு நாட்டின் வளம், சிறப்பு, தெய்வபக்தி, காதல் ஒழுக்கம், முதலியவை பற்றி இத்தலைப்பில் காணலாம்.

முதலில் இதற்கு இப்பெயர் வரக்காரணமான சுவையான கதை ஒன்றைக் காண்போம். கருவூரைத் தலைநகராகக்கொண்டு அரசாண்ட சேரப் பேரரசின் ஒரு பகுதியாக நமது கோவை மாவட்டமும், கொங்கு நாடும் அடங்கியிருந்தது. அதன் கடைசி சேர மன்னருக்கு மைந்தர் இருவர். அவருள் ஒருவனுக்கு 'சேரன்' என்றும் மற்றவனுக்குக் 'கொங்கன்' என்றும் பெயர்கள் வழங்கியிருந்தன. 'சேரன்' கொங்கு நாட்டின் மேல் பாதியை எடுத்துக்கொண்டான். அது தற்போது 'கேரளம்' அல்லது 'மலையாள நாடு' என்றழைக்கப்படுகிறது.

'கொங்கன்' மற்ற பாதியை எடுத்துக்கொண்டான். கொங்கன் கருவூரிலேயே தங்கினன். சோழ அரச குமாரியை மணந்தான். இவன் இங்கு வாழ்ந்து வந்த வேடுவரின் தொல்லையைத் தாங்கமுடியாது, நடு நாட்டிலிருந்து வேளாளர்களைக் கொண்டு வந்து குடியேற்றினன். அவர்கள் வேடுவர்களை அடக்கியும், அடிமைப் படுத்தியும், மலைவளத்தை அழித்தும், நிலவள நீர் வளத்தை அதிகப்படுத்தியும் திருத்தினர். அவர்களில் ஒருவனே நம்நூலுடைத் தலைவன்: பிற்காலத்தில் குறுநில மன்னனுகவும், வெள்ளோடையை தலைநகராக்கிப் பூந்துறை நாட்டுக்கு அதிபனுனன்.

குறுநில மன்னனுன காளிங்கராயன் ஒருமாபெரும் வள்ளல். தனக்கென வாழாத் தகைபெருஞ் சான்றோன். மேலும், கொங்கு நாட்டிற்கு அப்பெயர் அமையக்காரணம் கொங்கு நாடு என்ற பெயர் வழங்குவதற்கு மற்ருெரு காரணமும் கூறுவர். கங்கு என்ற சொல்லின் மருவு தான் கொங்கு என்று சொல்பவர்களும் உண்டு. விளிம்பு ஓரம், என்ற பொருளில் கங்கு என்ற சொல் கையாளப் படுகிறது. கங்கு கரையில்லை என்பது பேச்சு வழக்கு. இந்நாடு சேர, சோழ, பாண்டிய, தொண்டை, மைசூர், முதலிய நாடுகளின் கங்கில் அதாவது கரையில், ஓரத்தில், எல்லையில் இருந்தபடியால் கங்கு நாடு என்ற பெயர் பெற்றது. பின்னர் காலப்போக்கில் இச்சொல் மருவி கொங்கு நாடு எனத் திரிந்து வழங்கலாயிற்று என்றும் கூறுவர் அறிஞர். இதற்குச் சான்ருக கொங்கு நாட்டெல்லையில் உள்ள ஊர்களான மதுக்கரை, நவக் கரை, முதலியன கொங்கு நாட்டின் கரை ஓரத்தில் அமைந்துள்ளன.

கொங்கு நாட்டில் வளமிகுந்த பொருள்களாக விளைந்தவற்றைக் கொங்கு மண்டல சதகம் என்ற நூலில் பின்கண்டவாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

அருவளரும் மருதமொடு தன்குறிச்சி மூல்லை
தனிப்பருத்தி வேர்க்கடலை சாலிவளர் நிலமாம்
உருவளரும் பலதளிர்கள் உளமுவப்பத் தானுய்
உட்சமயம் மலர்ந்துவர உளேம் கொங்கு நாடே

இதன் மலைவளம் பற்றிப் பேசும் பொழுது கொங்கு நாட்டுக் குறவர் வாயிலாகப் புகழ்வது போன்ற பின் கண்ட பாடலைக் காண்க

சென்னிமலை, சிவன்மலை, செஞ்சேரி மலையோ!
செவணமலை, மருதமலை, சேர்வரையன் மலையோ!
பன்னிமலை, பவழமலை, பழனிமலை இவையோ!
பாலைமலை, கொல்லிமலை, பலமலையும் எமதே!

என்றும் குறத்தியர் மலைவளம் கூறுவதை கொங்குக் குறவஞ்சியில் காணலாம்.

பண்டு முதல் கொங்கு நாட்டில் தேன் மிகுதியாய்க் கிடைத்து வந்தது. தேன் என்ற சொல்லுக்கு கொங்கு என்பது பெயர். கொங்கு என்றாலே தேன் என்பது பொருள். சங்க இலக்கியத்திலும் கொங்கு தேர் வாழ்க்கை என்று தொடங்கும் பாடல் இதை நினைவு படுத்துகிறது. தேன் மிகுந்த நாடு என்ற கருத்தில் கொங்குநாடு என்ற பெயர் வந்திருக்கும். இதன் வரலாற்றை நோக்கினுல் பண்டு இது சேர. சோழ. பாண்டிய மன்னர்களாலும் விஜயநகரப் பேரரசர், மைசூரையாண்ட ஹொய்சலர், மதுரை நாயக்க வமிச மன்னர்களாலும் முறையே ஆளப் பெற்று வந்தது. அதன் பின்னர் அதிகமான், பேகன், காரி, ஓரி, நள்ளி, முதலிய கடை ஏழு வள்ளல்களில் சிலராலும் ஆளப்பெற்றது. இவர்கள் மலை வளம் நிறைந்த பகுதிகளில் காடு வெட்டி, நிலம் திருத்தி, மக்களின் மனம் திருத்தி, சீரும், சிறப்புடனும் பன்னெடுங் காலம் சிறப்புற ஆண்டனர்.

அக்கால முதலே வான் பொய்ப்பினும் தான் பொய் யாக் காவிரியும், அதன் கிளையாறுகளான காஞ்சி மாநதி என்கிற நொய்யலாறு, தட்சிணப் பிரயாகை என்கிற பவானியாறு, அமராவதி என்கிற தெய்வச் சிறப்பு மிக்க நதியும், மணிமுத்தாறு, தொப்பையாறு, சண்பஆறு, வாழைமீன்கள் மிகுதியுமுள்ள வாழையாறு, நள்ளாறு, குடவனாறு, மேலும் பெயர் தெரியாத எண்ணற்ற சிற்றாறு களும் நம் கொங்கு நாட்டில் பாய்ந்து நிலவளத்தை நீர் வளமாக்குகின்றன. இலக்கியத்தில் அறப்பளீசுவர சதகம் கொங்கு மண்டல சதகம், மாவட்ட கெசட்டியல், பல பிள்ளைத் தமிழ் நூல்கள், தல வரலாறுகள், வெளிநாட்டு யாத்ரீகர்கள் எழுதி வைத்துள்ள குறிப்புகள் ஆகியவற்றி லிருந்து பல உண்மைகள் நமக்குத் தெரிய வருகின்றன. தனிப்பாடல்கள் பலவற்றின் மூலமும் இதன் சிறப்புப் பேசப்படுகின்றது.

இக்கொங்கு நாட்டின் எல்லையைப் பற்றி விஜயமங் கலம் கார்மேகக் கோனார் 'அவர்கள் இயற்றிய கொங்கு மண்டல சதகம் கூறும் பாடலைக் காண்போம்.

வடக்கு தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்கு வெள்ளிப் பொருப்புக்குன்று கிழக்கு
கழித்தண்டலை சூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண்டலை யாவுங் கொங்கு

(கருத்து) கொங்கு நாட்டின் வடக்கு எல்லை தலைமலை தெற்கு எல்லை வைகாவூர் என்னும் பழனி, மேற்கு வெள்ளிமலை, கிழக்கு குழித்தலை-என்பனவாகும்.

மேலும் அதே சதகத்தில் கூறப்படுவதாவது

நீடுந் தமிழ்மன்னர் மூவர்க்கு மம்பொன்
நெடுமகுடம்
சூடும் பெருமை படைத்துயர் மக்களின்
சோர்வகற்றி
கூடும் பலவுண வூட்டுவே ளாளர்குடி சிறந்து
மாடும் பெருகி வளர்வதென்றே! கொங்கு
மண்டலமே,

இக்கொங்கு நாட்டிற்குத் தலைநகராக ஸ்காந்தபுரம் என்னும் தாராபுரம் பண்டு சிறப்புற்று விளங்கியது. சிலர் தற்போதுள்ள திருச்சி மாவட்டம் கரூர் தலைநகர் என்றும் கூறுகின்றனர். இவ்விரண்டிற்கும் பல சரித்திரச் சான்றுகளும், கல்வெட்டு, செப்பேடுகள் முதலிய ஆதாரங்களும் உண்டு என்று பகர்வர் சரித்திரத் தேர்ச்சி பெற்ற அறிஞர்.

இதன் பரப்புப் பற்றிய விவரமாவது தற்போதுள்ளபடி கோவை மாவட்டத்தில் கொள்ளேகாலம் ஒழிந்த ஒன்பது மாவட்டங்களும், சேலம் மாவட்டத்தில் ஓமலூர் திருச்செங்கோடு, நாமக்கல் ஆகிய வட்டங்களும், திருச்சி மாவட்டத்தில் கரூர், குழித்தலை முதலியவட்டங்களும், மதுரை மாவட்டத்தின் வடபகுதியான பழனி வட்டம் முதலிய பகுதியைக் கொண்டதுவே கொங்குநாடு ஆகும். இக்கொங்கு நாடு செழித்தால் எங்கும் செழிக்கும், என்ற முதுமொழியாக கொங்கு செழித்தால் எங்கும் செழிக்கும் என்ற சொல் வழங்குவதைக் காணலாம். இக் கொங்கு நாடு பண்டு (24) இருபத்தி நான்கு சிறு நாடுகளாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொன்றும் ஒரு நாடு என்ற பெயராலேயே வழங்கி வந்தன. அவைகளின் யெர்களாவன— (கொங்கு மண்டல சதகப்படி)

கொங்கு மண்டல சதகத்தில் கொங்கு நாட்டின்
24 பகுதிகள் பற்றிய பாடல்கள்

சொல்ல வரிதான பூந்துறை நாடு
தேன் கரை நாடு தோன்று புகழ் காங்கைய நாடு
தோராத பொன் குலுக்கி நாடு
நாடுபுகழ் ஆறைய நாடு
ஆறையொழி தோய்த வாரக்க நாடு
வல்லமுறு கேசர நாடு, வைகாபுரி நாடு
மணல் நாடு, தலைய நாடு, வருதட்டை நாடு

பூவாணி நாடு, ஒரு வெங்கை நாடு
மன்னீர் கிழங்கு நாடு, வல்லூக்க நாடு
வாழ் வந்தி நாடு, அண்ட நாடு, அறைய நாடு
ஆனமலை நாடு,, ராசீபுர நாடு, நிதமுமிலை அண்ணு
மலை நாடு உதவு காஞ்சிக்கோயில் இயல்
சேர் குருப்பை நாடு
இனிய சேர் புகழ் கொங்கு மண்டலந்
தனிலுள்ள இருபத்தி நான்கு நாடு தானே

1. பூந்துறை நாடு 2. தென்கரை நாடு 3. காங்கேய நாடு 4. பொங்கலூர் நாடு 5. ஆறை நாடு 6. வாரக்க நாடு 7. திருவாவினங்குடி நாடு 8. மண நாடு 9. தலைய நாடு 10. தட்டைய நாடு 11. பூவாணிய நாடு 12. அரைய நாடு 13. ஒடு வங்க நாடு 14. வடகரை நாடு 15. கிழக்கு நாடு 16. நல்லுருக்கு நாடு 17. அண்டை நா டு 18. வெங்கல நாடு 19. காவடிக்க நாடு 20. ஆனைமலை நாடு 21. இராசிபுர நாடு 22. காஞ்சிக்கூடல் நாடு 23. குரு நாடு 24. வாழவந்தி நாடு முதலியன.

இக் கொங்கு நாட்டில் பண்டு முதல் இன்று வரை அன்பும், பண்பும், அருளும், பொருளும், இவற்றின் பயனை ஒழுக்கத்தின் விழுப்பமும், ஈகையும், ஆண்மையும், ஆற்றலும் ஒருங்கே படைத்த வேளான் குடி மக்கள் உயிர்த் தொழிலாம் பயிர்த் தொழிலைத் தம் உயிரெனப் போற்றிச் செவ்வனே செய்து வந்தனர். இன்றும் செய்து வருகின்றனர். இவர்களே கவுண்டர் என்ற பட்டம் புனைந்த கொங்கு வேளாளர். இவர்களிடம் கால் நடைச் செல்வமும் சிறந்து விளங்கும். மேலும் மக்களின் முக்கிய பிணியான பசிப்பிணி போக்கியும், ஈகை குணமிகுந்தும் தமக்கென வாழாப் பிறர்க்குரியனராகவே வாழ்ந்தனர். இன்றும் அவ்வாறே வாழ்கின்றனர்.

இதன் காரணமாக நம்தமிழக அரசும், விவசாயக் கல்லூரி, வனவளக் கல்லூரி காட்டிலாகா அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றைக் கொங்கு நாட்டின் சிகரமான கோவை மாவட்டத்திலேயே செயல்படச் செய்கிறது. மேலும் கொங்குவேளாளர்களின் தலைவரான பழைய கோட்டைப் பட்டக்காரர் என்கிற மதிப்பிற்குறிய கனம் நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்களிடம் உலகிலேயே அழகும் குணமும் வலிமையும் நிறைந்த கால் நடைச் செல்வங்களின் நலனை சுகாதார முறையில் பராமரிக்கப் பெறுகின்றது.

தற்காலக் கொங்கு நாடு பண்டு முதலே எவ்வாறு சிறந்திருந்தது என்பதை பின் கண்ட புதுப்பாடல் இயம்பும் முறையைக் கவனிப்போம்!

நீரெல்லாம் பன்னீர் வாசம் நிலமெல்லாம் செந்நெல்லாகும்
ஊரெல்லாம் புனுகு வாசம் உண்பதோ அமிர்தமாகும்
பேரெல்லாம் தங்கம் பொன்னும் பெண்களோ தெய்வரம்பை
காருலாம் கொங்கு நாடு கனம்பெறு மகிழ்ச்சியாமே!

பொதுவாகக் கிராமங்களின் பெயர்கள் பாளையம், வலசு, கடவு, ஓடை, ஊர், பதி, கரை, நிலை என்ற ஈற்றுச் சொற்களால் முடிந்திருக்கும். உதாரணமாக மலையம்பாளையம், வட்டக்கல் வலசு, கிணத்துக்கடவு, வெள்ளோடை மஞ்சளூர், அப்பாச்சிக் கவுண்டன்பதி, நவக்கரை, ஓடாநிலை முதலியன இதற்குச் சான்றுகளாகும்.

## 3. கொங்கு நாட்டில் தமிழ்ப் பணி

தலைசிறந்த உரையாசிரியர்களும், தமிழறிஞர்களுமான அமிர்தசாகரர், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், முதலியவர்களை ஈன்றெடுத்தது நம் கொங்கு நாடு. மேலும் பெரிய வாச்சான்பிள்ளை, நம்பிள்ளை

செங்குன்றூர்கிழார், கொங்குவேள்மாக்கதை பாடிய நல்லாசிரியர், வேதாந்த தேசிகர், உரிச்சொல் நிகண்டாசிரியரான காங்கேயர், கொங்கு மண்டல சதகம் பாடிய கார்மேகக் கவிஞர், இடைஞானியார், இவர்களின் நூலான நன்னூல் என்னும் பொன்னூலையளித்த பவணந்தி முனிவர், மசக்காளி மன்றுடியார், பூங்கோதையார், இளையான் கவிராயர் முதலிய தமிழறிஞர்கள் கொங்கு நாட்டில் வாழ்ந்தனர்.

தற்காலத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும் கலைக்களஞ்சியத்தின் தலைமையாசிரியருமான கவிக்குயில் பெரியசாமித்தூரன், கோவை திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பேரூர் தமிழ்க்கல்லூரி முன்னாள் பேராசிரியரும் இலக்கணமணியுமான பண்டித ந. கந்தசாமி பிள்ளை, பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி முதல்வர் தவத்திரு இராமசுவாமி அடிகள், சரவணம்பட்டி சுந்தர சுவாமிகள், பவானி புலவர் குழந்தை, திருப்பராய்த்துறை சுவாமி சித்பவானந்தர், ஈரோடு ந. செகதீசன், (தமிழன்பன்), ஈரோடு புலவர் இராசு முதலியோரும், எழுமாத்தூர் தமிழ்ப் பேராசிரியர் தெய்வசிகாமணிக் கவுண்டர் முதலியோரும் இன்றும் கொங்கு நாட்டில் தமிழ்ப்பணி புரிந்து வருகிறார்கள்.

# 4. கொங்கு நாட்டில் பூந்துறை நாடு

நாம் சென்ற அத்தியாயத்தில் "பூந்துறைநாடு" என்பது கொங்கு நாட்டின் இருபத்தி நான்கு பகுதிகளில் ஒன்று என்பதைப் பார்த்தோம். இந்த அத்தியாயத்தில் பூந்துறை நாட்டின் தலையாய ஊர்களின் பெயர்களைப் பார்க்கலாம். கொங்கு மண்டல சதகச் செய்யுளின்படி அந்த ஊர்களின் பெயர்களின் வரிசை கீழே தரப்பட்டுள்ளன. 1. பூந்துறை 2. வெள்ளோடை 3. நசியனூர் 4. எழுமாத்தூர் 5. பிடாரியூர் 6. ஈங்கூர் 7. பெருந்துரை 8. சாத்தம்பூர் 9. காளமங்கலம் 10. குழாநிலை

11. கிளாம்பாடி 12. மொடக்குறிச்சி 13. அனுமன்பள்ளி 14. பழமங்கலம் 15. குளவிளக்கு 16 காகம் 17. அறச்சலூர் 18. விளக்கேத்தி 19. ஈஞ்சம்பள்ளி 20. சத்தியமங்கலம் 21. சேமூர் 22. மங்கலம் 23 வீரகநல்லூர் 24. ஈரோடு 25. பேரோடு 26. சித்தோடு 27. திண்டல் புதூர் 28. இலவமலை 29. திருவாச்சி 30. பனயம்பள்ளி 31. ஓடாநிலை 32. முருங்கைத்தொழுவு.

தற்போது அவல் பூந்துறை என்று வழங்கும் பூந்துறை நாடென்பது மேற்கண்ட முப்பத்திரண்டு தலையூர்களைக் கொண்ட நாடு. இவ்வூர்களின் தலைக்கிராமமான பூந்துறையை தற்போது ஈரோடு பூந்துறை டவுன் பஸ் மூலம் சுலபமாய் அடையலாம். பூந்துறை அருகே ஒரு பெரிய குளமும்—குட்டையும், ஏரி போல் பரந்த நிலப்பரப்பில் நீர் நிறைந்து நிற்பதையும் பார்க்கலாம். ஊரின் ஆரம்பத்தில் ஒரு பெரிய சிவன் கோவிலும் உண்டு அதில் சில கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. அதில் ஒன்று காளிங்கராயனைப் பற்றியனவாகவும் இருக்கக்கூடும். மேலும் வெள்ளோடை சர்வலிங்கேசுவரன் ஆலயங்களில் கல்வெட்டாலும் இந்தக் காளிங்கராயரைப் பற்றியும், அவரது சிறப்பான வீரச் செயலைப்பற்றியும் விவரிக்கப்படுகிறது.

இந்நூலுடைத் தலைவரான காளிங்கராயரது வரலாறு வற்றாத சுனைபோலும், சுரங்கம் போலும், மணற்கேணி போலும் புத்தம் புதிய கருத்துக்கள் கொண்ட ஜீவ காவியமாகும். எனவே இவ்வரலாறு தமிழ் மக்களும், மாணவ மணிகளும் அறிய வேண்டியதொன்றாகும். இவரது சந்ததியர்கள் இன்றும் பூந்துறையை அடுத்த சுற்றுப்புற ஊர்களிலும், பவானியை அடுத்த அணைத்தோப்பில் உள்ள காளிங்கராயன் புதூர் என்ற ஊரிலும், பொள்ளாச்சியை அடுத்த சமீன் ஊத்துக்குளி என்கிற ஊரிலும், இவர் வெட்டிய கால்வாய்க்கரையில் அமைந்த பல ஊர்களிலும், ''சாத்தந்தைகுலம்'' என்கிற சிறப்புப்

பெயருடன் கொங்கு வேளாள சமூகத்தினர் வாழ்கின்றனர் இவர்களுக்கெல்லாம் தலைவர் பொள்ளாச்சி - ஊத்துக்குளி சமீன்தாரர். இவர் தெய்வீகக்கலையும், பெருத்தகைமையும், உதார தமிழ்ப்பண்பும் நிறைந்தவர். இவரை நடமாடும் கடவுள் என்று கூறினும் பொருந்தும். இவரது துணை வியான திருவாட்டி ருக்மணி அம்மாள் அவர்கள் கற்புக் கும், பொற்புக்கும் எடுத்துக்காட்டான அழகுத்தெய்வம் போன்றவர்கள். பழையகோட்டை பட்டக்காரர் என்கிற கொங்கு வேளாள சமூகத் தலைவரான கனம் அமரர் இராவ்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்ருடியாரின் தவப் புதல்வியும், நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் அவர் களின் சகோதரியுமாவர். மன்ருடியார் அவர்களின் துணை வியார் நம் ஊருடைத்தலைவரான காளிங்கராயரின் பரம் பரையில் வந்த சமீன் ஊத்துக்குளியதிபர் மதிப்பிற்குறிய சமீன்தாரர் திரு. A. M. R. காளிங்கராயர் அவர்களின் சகோதரியாவர். இவ்வகையிலும் இருபெரும் கொங்கு வேளாளக் குடும்பத்தின் சுவைமிகுந்த வீர வரலாறு படிக்க வேண்டியதொன்றுதானே!

இனி அடுத்த பகுதியில் "கால்வாய் வெட்டிய காளிங்கராயரின்" வரலாற்றை சுவைபடப் படித்தறிய லாமா! தேனீக்களாகிய நீங்களே மலரின் மணத்தையும், தேனையும் நுகர்ந்து தேனைப்பருகிச் சுவையுங்கள்!

## 5. காணியாளர் - காளிங்கராயரின் பிறப்பு

நம் தமிழகம் சுமார் ஏழுநூற்ருண்டுகட்கு முன்பு எப் படியிருந்த தென்பதைச் சற்று முதலில் அறிவோம். அப் பொழுது சேர, சோழ, பாண்டிய அரசுகள் மூன்றின் ஒளி யும் அணைந்தும், அணையாமலும் செயலிழந்து செயல்பட் டது. இவற்றைத் தவிர நடு நாடு, தொண்டை நாடு, பல்லவ நாடு, கொங்கு நாடு முதலிய சிற்றரசுகளும், பல சமீன்கள், பாளையக்காரர்கள், முதலானவரும்

திரைகட்டி அரசாண்டனர். நாடு பலவகை வளமும் நிறைந்து செழிப்பாக விளங்கியது. மாதம் மும்மாரி பெய்தது. நிலவளம், நீர்வளம், குடிவளம், பொருள்வளம் முதலிய பதினறு வகைச் செல்வங்களும் தமிழகத்தில் செழித்துக் குலுங்கியது. மக்கள் எவ்விதமான குறையுமின்றி மனநிறைவுடனும், மகிழ்வுடனும் பதினறு வகைச் செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ்ந்தனர்.

அப்பொழுது கொங்கு வேளாளர் என்ற கவுண்டர் சமூகத்தினர் நடுநாட்டில் ஒன்று திரண்டு சேர்ந்து வாழ்ந்தனர். தற்போதுள்ளபடி தென்னுற்காடு, வடஆற்காடு மாவட்டத்தில் இவர்களின் கூட்டம் மிகுதியும் வாழ்ந்து வந்தது. அப்போது தமிழகத்தை அரசாண்டவன் பிற்காலச் சோழரில் மிகவும் சிறந்தவனுன ஆதொண்டைச் சோழச் சக்கரவர்த்தி என்பவன். அக்காலத்தில் நடு மங்கலத்தில் கொங்கு வேளாள சமூகத்தினர் மிகவும் பலம் வாய்ந்திருந்தனர். அவர்களில் சிறந்தவன் குழந்தைவேல் காளிங்கராயர். இவர் காளிங்கர் வம்சத்தில் பிறந்தவர். இவரது துணைவியார் பெயர் குழந்தையம்மாள் என்பது. இவரது மகன் பெயர் முத்துசாமி என்பது. இவர்களின் ஒன்றுதிரண்ட பலத்தையும், ஆண்மையையும் கண்டஞ்சினுன் ஆதொண்டைச் சோழன். சேர பாண்டிய மன்னர்களின் உதவியைக் கொண்டு நடுமண்டலத்தில் மிகவும் பலத்துடன் ஒன்று சேர்ந்து வாழ்ந்த கொங்கு வேளாளர்களை அடக்கினுன். அவர்களின் பலத்தைக் குறைக்க எண்ணி சேர, பாண்டிய மன்னர்களுடன் அவர்களைப் பிரித்து அனுப்பி வைத்தான். அவ்வாறுசேரமன்னருடன் கொங்குநாட்டிற்கு வந்து சேர்ந்தவரே நம் நூலுடைத் தந்தை சாத்தந்தைக் காளிங்கராயர். இவர் வெள்ளோடை என்னும் ஊரில் வந்து தங்கி அரசாண்டதால் வெள்ளோடை சாத்தந்தைக் காளிங்கராயர் எனப்பட்டார்.

கொங்குநாட்டை கி பி. 13ஆம்நூற்றுண்டில்''கங்கை இருகரையும், காவிரியும் கைக்கொண்ட'' கொங்கு பாண் டியன் வீரபாண்டியன்-என்னும் அரசன் சிறப்புடன் ஆண்டான். அவனிடத்தில் வெள்ளோடை சாத்தந்தை காளிங்கராயன் சாதாரணப் போர் வீரனுகச் சேர்ந்து உழைப்பாலும், திறமையாலும் பதவியில் படிப்படியாய் உயர்ந்துசேனைத்தலைவனுன். சிறிதுகாலத்தில்காளிங்கரது நிர்வாகத்திறமையைக்கண்ட கொங்குபாண்டியன் தனது அமைச்சனுகவும் ஏற்றுக்கொண்டான்.அதுமுதல் அரசுப் பொறுப்பில் அமர்ந்து ''மந்திரிக் கழகு வரும் பொருளுரைத் தல்'' என்ற நீதியை மெய்யாக்கி வந்தான்.

இவனே பிற்காலத்தில் சேர நாட்டுமக்களின் படை பலத்தை அடக்கவும், சோழன் மகள் ரிஷபதேவியை மணந்தபடியால், அரசிளங்குமரிக்குத் துணையாகவும் சேர நாட்டிற்கு அனுப்பப் பட்டான் என்றும் ஒரு வரலாறு கூறுகிறது. அதன் பின்னர் காணியாளர் என்ற பட்டத்துடன் பூந்துறை நாட்டின் தலைவனுகி ஆட்சியைத் திறம்பட நடத்தினுன். ஒரு சபதம் செய்துவிட்டு முறைப் பெண்ணுன அத்தை மகளை மணக்கவே ஒரு கால்வாய் வெட்டினுன். அவனுல் வெட்டப்பட்ட கால்வாய் அத்தலை வனை காளிங்கராயனின் பெயர் தாங்கி ''காளிங்கராயன் கால்வாய்'' என்ற பெயருடன் சிறப்புற இன்றும் விளங்கு கிறது. இதை பவானியிலிருந்து ஈரோடு வழியாகச் செல்லும் கொடுமுடியை அடுத்த நொய்யல் வரை பேருந்து புகைவண்டி மூலம் பயணம் செய்வோர் அனை வரும் கண்டுகளிக்கலாம், காளிங்கராயர் புகழ் பேசலாம்.

## 6. காளிங்கராயரின் இளமைப்பருவம்

நம் நூலுடைத்தலைவன் காளிங்கன் ''விளையும் பயிர் முளையிலே'' என்னும் முதுமொழிக் கேற்ப சிறந்து விளங் கினுன். இளமையிலே கல்வி, கேள்வி, ஒழுக்கம்,அன்பு, பண்பு, அடக்கம், முதலியவற்றில் ஒப்பாரும் மிக்காரு

யின்றி சிறந்து விளங்கினான். இவனது மனம் இயல்பாகவே பண்பட்டிருந்தது, பண்பட்ட நிலத்தில் விழுந்த விதை எவ்வாறு செழித்து வளருமோ அவ்வாறே இவனது உள்ளம் என்னும் பண்பட்ட நிலத்தில் விழுந்த கல்வி என்ற விதையும் செழித்து வளர ஆரம்பித்தது. அப்பயிர் நன்கு வளர ஆசிரியர் மூலம் கண்ணீர் என்கிற பருவ மழையும், ஆர்வம் என்கிற உரமும் கிடைத்தன.

நல்லாசானுடைய தனிப்போதனை மூலம் பாடங் கேட்டு வந்தான். அது காலை ஆசிரியரின் அன்புக்கும், பரிவுக்கும், உகந்தவராய் விளங்கினான். காளிங்கன் கல்வி பயிலும் போதும், பாடங்கேட்கும் பொழுதும், சீனு புரத்தில் வாழ்ந்த சைன முனிவர் பவனந்தியார் நன்னூலாம் பொன்னூலில் கூறியது போலவே அமைந்திருந்த குண இயல்பு ஈண்டு பாராட்டத்தக்கது.

"கோடல் மரபே கூறுங்காலைப்
பொழுதொடு சென்று வழிபடல், முனியான்
குணத்தொடு பழகி அவன் குறிப்பில் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்தனாகிச்
சித்திரப்பார்வையின் அத்தகவு அடங்கி
செவிவாயாக நெஞ்சுகளனாகக்
கேட்டவை கேட்டு விடாதுளத் தமைத்து
போவெனப் போதல் என்மனார் புலவர்"

என்ற இலக்கணத்திற்கு இலக்காக அக்கால இலக்கண இலக்கிய நூல்களையெல்லாம் ஐயந்திரிபற முறையாகக் கற்று உணர்ந்தான்.

வாலிபப்பருவம் வந்ததும், மன்னர்கட்குரிய குதிரை ஏற்றம், யானை ஏற்றம், வில் வித்தை, வாள் வித்தை, சிலம்பம், மல்யுத்தம் முதலிய உடல் வலிவூட்டும் கலை

கலேயும் சிறப்பாகக் கற்றுத் தேர்ந்தான். அக்கால குறு நில மன்னர்களின் இளவரசர்களில் தன்னே ஒப்பாரும் மிக் காருமின்றி,தோள்வலிவும், வாள்வலிவும் கொண்டு சிறந்த ஆண் அழகனுய்த் திகழ்ந்தான். இவன் புகழ் எண்டி சையும் பரவிற்று. இவன் புகழ் கேட்டகொங்குபாண்டியன் என்ற அக்கால கொங்கு நாட்டை கி பி. 1250-80 வரை அரசாண்டவன் இவனுக்கு கங்கை இருகரையும்,காவிரியும் கைக் கொண்ட கொங்கு பாண்டியன் வீர பாண்டியன் என்ற சிறப்புப்பெயரும் பெற்ருர். இது இவனது பெருமை யையும் இராச்சியத்தின் பரப்பையும் குறிக்கும்.

இம்மன்னன் காளிங்கனின் மதி நுட்பத்தையும், விதி நுட்பத்தையும், தோள் வலிவையும், வாள் வலிவையும் கண்டும், கேட்டும்,மனமார விரும்பினுன். எனவே நேரில் வருமாறு தக்கார்மூலம் ஓலேஅனுப்பி வரவழைத்தான் சில பல பரிசோதனேகள் செய்து சேனேத்தலேவனுக்கினுன். உழைப்பின் திறனுலும்,நேர்மையின் சீர்மையாலும்,உள்ள உறுதியாலும் வீரபாண்டியனுக்குப் பலவகையிலும் உற்ற துணேவனுக இருந்தான். எல்லா வகையிலும் முயன்று கொங்கு நாட்டை பலவகையிலும் உயர்த்திஞன். அக் காலக் கொங்கு நாடு இவனது தலேமையில் சீரும் சிறப் பும் பெற்று குன்றின் மேலிட்ட விளக்கெனத் திகழ்ந்தது. காளிங்கராயனின் தகுதி கண்ட கொங்கு பாண்டியன் இவனேத்தன் அமைச்சனுகநியமித்தான். விரைவில்முதன் மந்திரியாஞன் "மந்திரிக் கழகு வரும் பொருளுரைத்தல்" என்ற கொற்கையாண்ட அதி வீரனின் பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்தான்.

கொங்கு பாண்டியன் - வீரபாண்டியன் அப்போது கொங்கு நாட்டை இருபத்தி நான்கு சிறுபகுதிகளாகப் பிரித்தான். ஒவ்வொரு பகுதிக்கும் பிரதி நிதிகளேநியமித் தான். அரசாட்சி சிறப்புடன் விளங்க அவற்றுள் மிகவும் சிறப்பும் தலேயாயதுமான பூந்துறை நாட்டிற்கு நம் காளிங்கனே நியமித்தான்.அரசுப் பட்டயம் அளித்தான்.

அப்பூந்துறை நாட்டைப் பற்றி முன் அத்தியாயத்தில் விளக்கமாய்ப் படித்தோம்! அதன் தலைநகராக வெள்ளோடை என்ற கிராமத்தைக் கொண்டு அரசாண்டான். எனவே இவன் வெள்ளோடை சாத்தந்தைக் காளிங்கன் என்று இலக்கியத்திலும், கல்வெட்டுக்களிலும் புகழப்படுகிருன்.

மேலும் நம் நூலுடைத்தந்தை காளிங்கராயன் கொங்கு நாட்டிற்கு வந்து வெள்ளோடை என்ற ஊரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட வரலாறு வேறுவிதமாகவும் கூறப்படுகிறது. அதையும் ஈண்டு ஒப்பு நோக்குவோம். நமது தமிழகத்தில் மைசூர் புலிகள் என்று சரித்திரம் பேசும் புகழ்மிக்க ஹைதர் அலி, திப்புசுல்தான் இவர்கள்படையெடுப்பால் நேர்ந்தசேதம் கணக்கிலடங்கா. அப்போது அரசாங்கப் பழஞ்சுவடிகள் பல பாதுகாத்து வைத்திருந்தவைகளும் சேதமுற்றன. அதனுல் அறுதியிட்டுப் பல சான்றுகள் காலநிர்ணயத்துடன், புள்ளி விவரத்தோடு, எழுத இயலாதிருக்கிறது.

இருப்பினும் தென்னகத்தின் சிற்றரசர் போன்ற சமீன்தாரர்களாயிருந்தவர்களைப் பற்றி ஆங்கில நூல் ஒன்று ஊத்துக்குளி சமீன்தார் அவர்கள் மூலம் கிட்டியது. அந்நூல் ஆங்கிலத்தில் உள்ளது. அதைஎழுதியவர் திரு வடிவேலுப்பிள்ளை என்பவர். அதன் பெயர் [The ruling chiefs, Nobles and Jamindars of India Volume No I by A.Vadivelu. Published by G.C. Loganathan brothers II Line, Madras.]

இந்த நூலில் ஒரு பகுதியில் ஆங்கிலத்தில் [Muthu samy Kalingarayar Avergal Jamidar of Uthu kuli, Coimbatore district Madras state] கோவை மாவட்டம், ஊத்துக்குளி ஜமீன்தாரர், திரு. முத்துசாமி காளிங்கராயர் என்பவரைப் பற்றி விளக்கமாய் சுமார் 100

பக்கங்கள் விவரித்துள்ளது. இதில் உள்ள கருத்துக்களை வாசகர்களுக்கு தமிழில் மொழி பெயர்த்து சுவை கெடாமல் அளிக்க முயல்கிறேன்.

சோழ அரசன்—ஆதொண்டைச் சோழச் சக்ரவர்த்தியின் மகளான ரிஷபதேவி என்ற அரச குமாரியை சேர மன்னன் மணந்தான். சோழமன்னன், திருமணம் முடிந்ததும் அரச குமாரியுடன் அனுப்பி வைத்த பரிசுப் பொருள்கள் பலவற்றுள்ளுடனும் சேர்த்து சேர அரசனுக்கு இந்நூலுடைத் தலைவனான காளிங்கராயனையும் கி.பி. 1255 ல் அதாவது 13ம் நூற்றுண்டில் சேர நாட்டிற்கனுப்பி வைத்தான். அக்கால வழக்கங்களில் இது மாதிரி சுத்தவீரன், பெரும்புலவர், ஆகியவர்களை அரசன் தன் மகளுக்குப் பாதுகாப்பாகவும், தக்க சமயத்தில் நல்ல யோசனைகளைச்சொல்லும் பொருட்டும் அனுப்புவது வழக்கம். இவ்வாறே புகழேந்திப் புலவர் சோணுட்டிற்கு வந்த கதை நாடறியும். அதுபோலவே காளிங்கராயன் கொங்கு நாட்டிற்கு வந்து சேர்ந்தான் என்றறியலாம்.

# 7. கால்வாய் வெட்டக் காரணம்

காளிங்கராயனுக்கு மணப்பருவம் வந்தது அவனது தந்தை சாத்தந்தைக் காளிங்கராயன் தன்மைத்துனராகிய கரூர்-பண்ணை குலத்தான் என்பவர் வீட்டிற்குச் சென்றார். பெண் நிச்சயதார்த்தம் செய்கையில், பெண் வீட்டாரின் சமையல்காரன் "திருமணத்துக்கு வரும் உறவினர்களுக்கு எப்படிப்பட்ட அரிசி போட்டுச் சமைக்க வேண்டும்? உயர்ந்தரக சம்பா அரிசியா?" என்று வினவினன். அதற்குப்பெண் வீட்டார் "மணமகன் வீட்டு உறவினர்கள் மேட்டுப்பாங்கான புன்செய்ப் பிரதேசத்திலிருந்து வருகின்றனர். அவர்களுக்கு உயர்ந்தரகமான சீரகச் சம்பா அரிசிச் சோறு என்றும், மட்டமான குறுவை அரிசிச் சோறு என்றும், பிரித்து ரசித்துண்ணும் பாங்கு

இருக்காது. ஏதேனும் ஒருவகை அரிசியைப் போட்டுச் சமைக்கலாம். இதற்கு இவ்வளவு பெரிய பிரச்சனை தேவையில்லை'' என்று விளக்கிப் பதில் கூறிவிட்டார். இச்சம்பவம் பெண் நிச்சயம் செய்ய வந்திருந்த உறவினர்களையும், சாத்தந்தைக் காளிங்கராயனையும் மிகவும் உறுத்தியது. தங்களை வேண்டுமென்றே அவமதித்ததாகவும், இகழ்ந்ததாகவும் எண்ணிச் சினமுற்றனர். எனவே சாத்தந்தைக் காளிங்கராயன் தன் உறவினருடன் ''எனது பிரதேசத்தில் நன்செய்த் தானியம் விளையுமாறு மாற்றியமைத்து விட்டு பிறகு அந்த வீட்டில் மணமுடிப்பேன்'' என்று சபதம் செய்து விட்டுச் சென்றான். அதன் காரணமாய் 12 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டது என்றும் அதன் காரணமாகவே காளிங்கராயன் கால்வாய் வெட்டப்பெற்றது என்றும் ஜமீன் வமிச வரலாறு கூறுகிறது.

# 8. கன்ன பரம்பரையாகக் கூறும் மற்றொரு நிகழ்ச்சி

காளிங்கராயன் மதுரையை ஆண்ட திருமலை நாயக்க அரசரின் உதவியாளர். எனவே அவன் தனது அரசரான திருமலை நாயக்கரிடம் தனது திரைப் பணத்தைக் கட்டிவிட்டுக் கரூர் வழியாகத் திரும்பி வந்தான். நொய்யல் என்ற ஆற்றருகே உள்ள ஊர் வரும்போது மாலைமயங்கும் நேரமாய் விட்டது. சூரியன் மறையும் நேரமும் வந்து இருட்டும் கப்பிவிட்டது. எனவே தனது அத்தை வீடு அக்காலத்தில் நொய்யலாறு காவிரி சேருமிடத்தில் உள்ள ஆவுடையார் பாறையிலிருந்தது. அங்கு சென்று இரவு தங்கி மறுநாள் காலையில் ஊர் திரும்பலாம் என்ற எண்ணத்துடன் அத்தை வீட்டிற்கு விருந்தாளியாகச் சென்றான்.

அத்தை வீட்டிலிருந்த முறை மணப்பெண்ணும் இவனது வரவைக்கண்டு மகிழ்வடைந்தாள். காளிங்கனது அத்தையும் முக மலர்ச்சியுடன் வரவேற்றார். குடும்ப நலன்களை விசாரித்தறிந்து மகிழ்வடைந்தாள். சிறிது நேரம் சென்றதும் தன் மகளைப்பார்த்து பின் கண்டவாறு கட்டளையிட்டாள். "உன் மாமன் மகன் அத்தான் வந்துள்ளார். அவருக்குச் சுவையான விருந்து விரைவில் தயார் செய்க" என்றாள். அதைக் கேட்ட அப்பெண் "தன் தாயாரிடம் என்ன தானியம் போட்டு விருந்து தயார் செய்யட்டும்?" என்று வினவினாள். மேலும் "எருதுழக்கை போட்டு சமைக்கவா? அல்லது மாட்டு-மூக்கை போட்டு சமைக்கவா?" என்றும் வினவினாள். அதற்கு அவள் தாயார் குறுக்கிட்டு, "அவர் மேட்டுப்பிரதேசத்திலிருந்து வந்தவராகையால் எருதுழக்கையே போட்டு சமைக்கலாம்" என்றாள். இதன் விளக்கம் என்னவென்றால் எருதுழக்கை என்றால் எருது பூட்டி உழுது விளைந்த புன்செய்த் தானியம் என்பது, கம்பு, சோளம், தினை, ராகி முதலிய தானியங்கள் ஆகும். மாட்டு-மூக்கை என்பது எருமை பூட்டி உழுது அதன் மூலம் விளைந்த நன் செய்த்தானியமான நெல் என்பது பொருள்.

அதன்படியே விருந்துணவு தயார் செய்யப் புன் செய்த்தானியம் போட்டுத் தயாரிக்கப் பட்டது. இது தெரிந்த நம் கர்ம வீரன் காளிங்கராயன் தனக்கு உடல் நிலை சரியில்லை என்றான். வயிற்றில் வலி ஏற்பட்டுள்ளதால் உணவு எதுவும் உண்ண இயலாது என்றும் சமயோசிதமாக சாக்குச் சொல்லி விட்டான். அதன்படியே அன்றிரவு ஊண் உரக்கமின்றி தனக்கு நேர்ந்த இந்த அவமானத்தைப் போக்க எண்ணித் தீர்வு காண முற்பட்டான். அதிகாலையில் எழுந்து காளிங்கனும் அவனது காவலாளியும் தத்தம் குதிரைகளைத் தயார் செய்து புறப் பட்டனர். அதிவிரைவில் புறப்பட ஆரம்பித்ததை காளிங்கனது அத்தை கவனித்தாள். இருவரையும் காலை உணவு அருந்திய பின்பு செல்லலாம் என்று வினயத் துடன் வேண்டினாள்.

அதற்கு காளிங்கன் கோபாவேசமாகவும், சூளுரையாகவும் பின்கண்ட வசனங்களைப் பேசினுன், "என்னை அவமானப்படுத்தவும், எனது விளை நிலங்களை நன்செய் நிலமாக மாற்றியமைக்கத் தூண்டுவதற்காகவே எனக்குப் புன்செய் தானியத்தால் உணவு தயாரிக்கும்படி கட்டளையிட்டாயல்லவா? நானும் இவற்றை மறவாது ஊர் சென்றதும் இதற்கு நல்லதொரு தீர்வு காண்பேன். விரைவில் முயன்று ஒரு கால்வாய் வெட்டி, பவானியில் ஒரு அணையும் கட்டி பாலைவனத்தைச்சோலை வனமாக்குவேன். அதற்குப்பின் அந்தக்கால்வாய் உன் வீட்டின் கொல்லைப் புறமாகவே ஓடிவந்து வளமாக்கும். அதன் கழிவு நீர் நொய்யலாற்றில் போய்ச்சேருமாறு செய்வேன். இதுவே என் முதல் கடமை" என்று சூளுரைத்துத் தன் குதிரை மீதிவர்ந்து சவாரி செய்தான். அதிவிரைவில் பூந்துறைக்கும் வந்து சேர்ந்தான்.

## 9. சூளுரையைச் செயல் படுத்துதல்.

காளிங்கராயன் தான் விடுத்த சூளுரையைத் தீவிரமாகச் செயல்படுத்த தீவிர எண்ணங்கொண்டான். இதை வெற்றியுடன் செயல்படுத்த கடவுளின் துணை வேண்டும் என்று நம்பினுன். எனவே பூந்துறையை அடுத்த பாடகவல்லி நாச்சியார் என்ற பாலமடை அம்மன் கோவிலுக்குச் சென்ருன். மெய் சிலிர்க்க மனம் ஒருமுகப்பட்டு இறைவியின் திருவருளை வேண்டி நின்ருன். பயபக்தியுடன் செய்த முறையீடும் வீண் போகவில்லையே!

அசரீரி என்ற வான் வழி ஓசை ஒலித்தது. அதாவது "காளிங்கா! உனது விருப்பம் நிறைவேறும், பவானி ஆற்றில் கூடுதுறைக்கு சற்று முன் பக்கம் சுமார் ஒருகல் தொலைவு நோக்கிச் செல். ஆங்கு என் காவல் தெய்வங்களான வேம்பராயன், உத்தண்டராயன் என்ற பெயருள்ள இருவரும் மீனவர் வடிவில் உன்னை வரவேற்பர். அவனைக்

கட்டு வேலை முடியும் வரை அவ்விருவரும் உன்னுடனிருந்து அவ்வப்போது வேண்டிய எல்லா உதவிகளையும் குறைவின்றி நிறைவேற்றி வைப்பர், மனங்கலங்காதே, எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலை உனக்களிக்கிறேம்'' என்றது.

அதன்படியே காளிங்கராயன் தன்குதிரை மீதிவர்ந்து அவ்விடத்தையடைந்தான். அம்மன் கூறியபடியே இரு மீனவரையும் அவ்விடத்தில் கண்டான். காளிங்கனைக் கண்டதும் அவர்களாகவே மகிழ்வோடு வரவேற்று தாங்கள் இன்னரெனத் தெரிவித்துக் கொண்டனர். அம்மன் தங்களுக்குஇட்டகட்டளைகளையும் தெரிவித்தனர்.

(1) அணைக்கட்டி, கால்வாய் வெட்டி முடியும் வரை உடனிருந்து உதவி செய்ய வேண்டியது.

(2) அருகில் தெரியும் வேதகிரி என்றழைக்கும் ஊராட்சிக் கோட்டை மலையிலிருந்து கல்லுடைத்து எருமை பூட்டிய வண்டியில் ஏற்றிக் கொண்டு வருவது.

(3) அணைக் கட்டுமிடத்தைக் காட்டுவது

(4) உடனிருந்து எல்லா உதவிகளையும் செய்வது முதலியன.

# 10. அணைகட்டத் திட்டம் வகுத்தல்

வேம்பராயர், உத்தண்டிராயர் இருவரும் வழி காட்டியபடியே தன் கடமைகளை காளிங்கராயன் பின் தொடர்ந்தான். குறிப்பிட்ட இடம் வந்ததும் அவ்விருவரும் நின்று ஆற்றின் மறுகரையில் உள்ள ஊராட்சிக் கோட்டை மலையினைச் சுட்டிக் காட்டி அங்கிருந்து கல் உடைத்து வருவதாகக் கூறினர். அணைக்கட்டு வேலையும் ஒரு நல்ல நாளில் தொடங்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் வேலை செய்தனர். சிறந்த முறையில் திருப்பணி

நடந்தது. அணைத்தோப்பில் சிற்றுளியால் கல்லுடைக்கும் ஓசை ஒலித்த வண்ணமிருந்தது. இது நடந்தது கி.பி. 17ஆம்நூற்றாண்டில். அணைக்கட்டு வேலைகள் முடிவுறும் சமயம் நெருங்கியது. தண்ணீரைத் தடுத்துத் தேக்கி நிறுத்தும் முக்கியமான தடைச் சுவரில் ஒரு பகுதி நிரந்தரமாய் நிற்காமல் பிடிப்பின்றி இடையிடையே இடிந்து விழுந்து விட்டது. இந்த இடையூற்றை நீக்கி வெற்றி காண காளிங்கன் தீவிரமாய்ச் சிந்தித்தான். தேவியின் அருளை நாடித் தியானித்தான். தேவியும் உள்ளொளி காட்டினாள்.

அதன்படியே தம் சொந்த ஊரான வெள்ளோடைக்கு விரைந்து சென்றான். தனக்கு அனுமதி தந்த பாலமடையம்மன் என்ற சக்தியின் சிலையுருவம் அக்காலத்தில் அனுமன்பள்ளி என்ற ஊரில் இருந்தது அவ்வம்பாளை இருகரம் குவித்து பக்தியுடன் பணிந்து நின்றான். அம்மனிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. எனவே அம்மனின் திருவுருவை எடுத்துச் சென்று அணைத்தலைப்பில் வைப்பதுவே சிறந்த வழி என்றும், அதனால் இடிந்து விழும் அணைச் சுவர் நிலைத்து நின்று விடும் என்றும் ஒரு முடிவுக்கு வந்தான். இரு காவல் தெய்வங்களான உத்தண்டிராயர், வேம்பராயர், அம்மன் ஆகிய மூன்று சிலைகளையும் பெயர்த்தெடுத்தான். எருமை பூட்டிய வண்டியில் ஏற்றினான். சுமார் 5 மைல் தூரம் வண்டி வந்தது, எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. வெள்ளோடை தாண்டி ஈரோட்டை நோக்கி வண்டி வந்து கொண்டிருந்து கவுண்டச்சி பாளையம் அருகே வந்ததும் வண்டியின் அச்சு (இருசு) முறிந்து போயிற்று. வண்டியை இழுத்து வந்த எருதுகள் இரண்டும் அவ்விடத்திலேயே மண்டியிட்டுப் படுத்துக் கொண்டன. காளிங்கன் செய்வதறியாது மனம் கலங்கி நின்றான்.

அதேசமயம் ஒரு மூதாட்டி அவ்வழியே பயணம் செய்தாள். அவ்வம்மையாருக்கு இந்நிகழ்ச்சி ஒரு தெய்வீக சக்தியால் நிகழ்ந்தது என்பது தெரிந்தது.

அந்த அம்மையாருக்கு தெய்வீக ஆவேசம் பிறந்தது. அம்மூதாட்டி பக்திப்பரவசத்தால் ஆடினாள்; பாடினாள்; பல ஆவேச மொழிகளையும் பின் கண்டபடி பகரலானாள்.

"இந்த அம்மன் சிலையையும், இதன் காவல் தெய்வங்களின் சிலைகளையும் இவ்விடத்திலேயே நிலை நாட்டி விடவும். தெய்வத்தின் பார்வை நீ கட்டும் அணையை நோக்கி இருக்கட்டும். எல்லாம் சரியாய் அமைந்து விடும்'' என்று கூறி அருகில் இருந்த மண்ணை ஒரு கைப்பிடி அளவு அள்ளி எடுத்துக் கொடுத்தாள். அந்த மண்ணை வைத்து அணைச் சுவர் எழுப்பினால் விழாமல் நிலைத்து நிற்கும் என்றும் கூறினாள்.

அதன் படியே காளிங்கராயன் பவானிக்கு விரைந்து குதிரை மீதிவர்ந்து அத் தலைப்பை அடைந்தான். மூதாட்டி கூறியவாறே அந்த மண்ணை வைத்து சுவற்றைக்கட்டி முடித்தான். சுவர் முன்னை விட வலிவும் வனப்பும் கொண்டு அணைக்கட்டு வேலை பூர்த்தியாயிற்று.

காளிங்கராயன் அணை கட்டி முடிய சுமார் ஆறு ஆண்டுகள் ஆயின. அந்த ஆறு ஆண்டுகளிலும் நம் நூலுடைத் தலைவன் காளிங்கராயன் தாடி வளர்த்துக் கொண்டும், ஒரு போது உணவுண்டும், யோகி போல தவ வாழ்வு வாழ்ந்து வந்தார். அடுத்த பகுதியில் காளிங்கன் அணைக்கட்டித் தேக்கிய நீரைச் செலுத்த கால் வாய் வெட்டித் திட்டமிட்டதையும் அக்கால்வாயின் பெயர் அவனது பெயராலேயே வழங்கி வருவதையும் விரிவாய்க் காண்போம்.

# 11. கால்வாய் வெட்டத் திட்டம் வகுத்தல்

காளிங்கன் அணையைக்கட்டி நீரைத் தேக்கி விட்டான். அவ்வணை அவன் பெயராலேயே பவானியருகில் இன்றும் விளங்கி வருகிறது.



அணைத் தலைப்பு



அணைக்கட்டுத்
தோற்றம்



வழிகாட்டிய
பாம்பு

கால்வாய் வெட்டத் திட்டமிட்டு மனம் குழம்பியிருந்தான். அன்று இரவு படுக்கைக்குச் செல்லும் போது காளிங்கன், தனது குலதெய்வத்தையும், குல முதல்வனையும் ஆழ்ந்து பிரார்த்தனை செய்தான். தனக்கு வழி காட்ட வேண்டும் என்று வணங்கினான். அவனது உண்மையான பிரார்த்தனை வீண் போகவில்லை. அன்று இரவில் காளிங்கனது கனவில் ஒரு முதிய அந்தண வடிவில் இறைவன் தோன்றினார். காளிங்கனுக்குப் பின் கண்ட அறிவுரையைப் பகர்ந்தார்.

" உனக்குக் கால்வாய் வெட்டும் பாதையை வழி காட்ட உன்குல முதல்வனான காளிங்கன் ஒரு பெரிய நல்ல பாம்பு வடிவத்தில் காலையில் வருவான். அது ஊர்ந்து சென்று வழிகாட்டும் பாதையில் கால்வாய் வெட்டுக நீ விரும்புகிற படியே உன் அத்தை வீட்டுக் கொல்லைப்புற வழியே சென்று காஞ்சிமா நதியில் சேர்ந்து மறையும். காவிரியின் ஒரு கிளையாற்றிலிருந்து பிரியும் உனது கால்வாய், அதே காவிரியின் மறு கிளையாறான நொய்யல் நதியில் கழிவு நீர் சேறுமாறு காளிங்கன் வழி காட்டுவான். எல்லாம் நல்லபடியே நடக்கும். நீ கவலைப் படாதே" என்று கூறி மறைந்தார்.

மறு நாள் பொழுது விடிந்ததும், அந்தணன் கனவில் கூறியபடியே ஒரு பெரிய நல்ல பாம்பு காளிங்கனை நாடி வந்தது. காளிங்கனும் தன் குலமுதல்வனே, நேரில் வந்தமைக்கு மனமிக மகிழ்ந்து பூசை வழிபாடு செய்து பால் பழம் முதலியவற்றை ஆகாரமாய்க் கொடுத்தான். நல்ல சுப வேளையில் வழிகாட்ட ஆரம்பித்தது. பவானி ஆற்றில் அணைத் தலைப்பில் வழிகாட்ட ஆரம்பித்த அப் பாம்பு வளைந்து வளைந்து சுமார் அறுபது கல் தொலைவு சென்றது. திருச்சி மாவட்ட எல்லையான கொடுமுடியை அடுத்த நொய்யலாறு வரை சென்றது. காளிங்கனது அத்தை வீட்டுக் கொல்லைப்புற வழியாகவே சென்றது. அதாவது ஆவுடையார் பாறை என்ற அத்தை ஊர்

வழியாகவே ஊர்ந்து சென்றது. காஞ்சிமாநதி
றழைக்கும் நொய்யலாற்றில் வந்து சேர்ந்து
கடமையை முடித்துக் கொண்டு மறைந்தது. மக்
இச் செயலை வியப்பாகவும், இறைவனின் திருவருட்
லாகவும் எண்ணிப்பாராட்டினர். "முயற்சியுடை
இகழ்ச்சியடையார்," என்ற முது மொழி வீண்
வில்லையே!

நமது கர்ம வீரன் காளிங்கனும், அவனது
களும், பாம்பு காட்டிய வழியில் கால்வாய் வெட்ட
யாளம் செய்து கொண்டே சென்றனர். பவானியாற்றி
ருந்து சுமார் 6 அடி ஆழமும் 16 அடி அகலமு
கொண்ட கால்வாயாக வெட்டத் தொடங்கினர். வர
அக்கால்வாயின் அகலமும், ஆழமும் நீர் ஓட்டத்
கேற்ப சற்றுத் தாழ்ந்தும், விரிந்தும், ஆழமும் கொண்
வெட்டப்பட்டது. இதன் அமைப்பை அணைத்தலைப்
கால்வாயாகப் பிரிந்து சீற்றத்துடன் பாய்ந்து வருவ



மேலே உள்ள படத்தில் காணலாம். சுமார் 60
தூரத்தை ஆறுண்டுகளில் கால்வாயாக வெட்டி மு
தனரே இது பெரும் வியப்பல்லவா?

காளிங்கனும் தான் முன்பு தன் அத்தை வீட்டில் செய்த சூளுரையை மறக்காமல் ஆவுடையார் பாறையில் செய்து முடித்தான். அப்போதுள்ள ஆவுடையார் பாறை தற்போதுள்ள இடத்தில் அமைந்தது இல்லை. தற்போதுள்ள புகை வண்டிப் பாதைக்குச் சற்று வடக்கே அமைந்திருந்தது. அதன் சின்னமாக இன்றும் ஆவுடையாரைப் போலவே அமைந்த ஒரு சிதைவுற்ற பாறை நினைவுபடுத்துகிறது. தற்போதும் அவ்விடத்தில் இக்கால்வாய் மெலிந்தும் ஒடுங்கியும் ஓடிவருவதை நேரில் காணலாம். ஈரோடு—திருச்சி புகை வண்டியில் செல்லும் போதும் நொய்யல் பாலத்துக்கு முன்பு சற்று உன்னிப்பாகக் கவனித்தால் இந்த உண்மை விளங்கும். காளிங்கனின் அத்தை வீட்டுப் பக்கமாகக் கால்வாய் வெட்டு வேலை நடக்கும் போது நிகழ்ந்த ஒரு சம்பவம் பற்றிக் கன்ன பரம்பரைச் செய்தி ஒன்று கூறப்படுவதையும் அடுத்த பகுதியில் காண்போம்.

## 12. பணிசெய்த நாவிதன் பெயர் நிலைத்திருக்கச் செய்தல்

நமது நூலுடைத் தலைவன் கர்ம வீரன் காளிங்கராயன்
"எண்ணிய எண்ணியாங் கெய்துவர்—எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்"— என்ற பொய்யா
மொழிக்கு மெய்யான எடுத்துக் காட்டானான். அணை கட்ட ஆரம்பித்த நாளிலிருந்து பன்னீராண்டுக் காலம் திட வைராக்கியத்துடன் தலைமுடியை எடுக்காமல் வளர்த்து வந்தான். அதனால் தாடியும் மீசையும் வளர்ந்து மிக நீண்டு பெரிய முனிபுங்கவரைப் போல விளங்கினான். ஒருகாரியம் முடியும்வரை அடிக்கடி அதை நினைவுபடுத்த வேண்டி இம்மாதிரி சடை, முடி வளர்த்துவது நம் நாட்டுப் பழக்கம். அதன் மூலம் மனிதனுக்கு வைராக்கியம் மேலோங்க வாய்ப்புண்டு. காளிங்கராயனுடன் கால்வாய்

வெட்டும் பணியை மேற்கொண்ட ஏவலரும் காவலரும், தங்கள் தலைவனின் இலட்சியம் நிறை வேறியதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்.

காளிங்கனின் அத்தை வீட்டுப் பக்கம் கால் வாய் வெட்டும் பணி நடை பெறும் போது நம் நூலுடைத் தலைவன் தன் இலட்சியம் நிறைவேறியதைக் கண்டு களி பேருவகை அடைந்தான். அது சமயம் அவனது அத்தை வீட்டுத் திண்ணையில் படுத்துக் களைப்பாறியவன் அயர்ந்து தூங்கி விட்டான், உடல் அயர்ச்சியின் காரணமாகவும், அணைக்கட்டு வேலை தொடங்கிய நாள் முதல் பன்னீராண்டுக் காலமும் தினமும் இருமணிக் காலமே உறங்க அவனுக்கு ஓய்வு கிட்டியது. எனவே காளிங்கன் இரண்டு நாட்கள் வரை கண் விழிக்காமலே அயர்ந்து தூங்கி விட்டான்.

அது சமயம் உடனிருந்த ஏவலரில் அம்பட்டர் என்கிற இரு நாவிதர் அப்போது சும்மா இருக்கவில்லை. தங்கள் தலைவரது இலட்சியம் நிறைவேறியது கண்டு மிகவும் மகிழ்ந்தனர். தங்கள் தலைவர் லட்சியம் முடியும் வரை அவர் வளர்த்திருந்த சிகை மிக நீண்ட ஜடா முடியையும், தாடியையும் நீக்குவதில் முனைந்தனர். தூக்க மிகுதியால் காளிங்கராயருக்கிருந்த அசதியில் தங்கள் தலைவருக்கும் தெரியாமல் முடியை நீக்கினர். தூங்கியவரின் எதிரில் ஒரு நிலைக் கண்ணாடியையும் பொருத்தி வைத்துப் பதுங்கியிருந்தனர். தூக்கம் விழித்தெழுந்த காளிங்கன் தன் முன் வைத்திருந்த நிலைக் கண்ணாடியின் மூலம் தனது முடி களையப்பெற்று பொலிவுடனிருப்பது கண்டு அகமிக மகிழ்ந்தான். தனக்கும் தெரியாமல் இக்காரியத்தைத் திறமையுடன் செய்த தனது நாவிதர்களின் கைத்திறனைப் பாராட்டினான். அவர்களை அழைத்தான். அவர்கள் இருவரும் பயபக்தியுடன் பணிந்து குறுகி எதிர் நின்றனர். கை கூப்பி அடி வணங்கி மரியாதையுடனும், பயபக்தியுடனும் நின்றிருந்த

நாவிதர்களைப் பார்த்து காளிங்கனுக்கு மகிழ்ச்சி பொங்கிற்று. ''என் அனுமதியில்லாமல் ஏன் இச்சேவையில் ஈடுபட்டீர்கள்? தூக்கம் கூட கலையாமல் மிகவும் சாதுரியமாகச் செய்த உங்கள் கைவண்ணத்தை மிகவும் மெச்சுகின்றேன். இதற்கு என்ன கைம்மாறு வேண்டும்?'' என்று அன்போடும், பரிவோடும் அதட்டினான்.

தங்களுக்கு என்ன நேருமோ என்றஞ்சிய நாவிதர்கள் ''சுவாமி எங்கள்பெயர்என்றும்நிலைத்திருக்கஏதேனும் செய்யுங்கள். அதற்கு மேல் எங்களுக்கு எதுவும் வேண்டாம்.'' என்று கைக்கட்டி, வாய்பொத்தி வணங்கி நின்றனர். அவர்களது பணிவு, கடமையுணர்வு, நன்றியுணர்வு ஆகிய பண்புகளைக் கண்டு அகமிக மகிழ்ந்தான். அவர்களின் வேண்டுகோளின்படியே பவானியில் அணைத்தலைப்பின் கீழ் உள்ள கிராமத்திற்கு ''அணை நாவிதன் பாளையம் கிராமம்'' என்றும், மேல் தலைப்பில் உள்ள பகுதிக்கு ''மேட்டு நாவிதன் பாளையம் கிராமம்'' என்றும் பெயர் சூட்டினான். இன்றும் அப்பெயர்கள் அவ்வாறே நின்று நிலைத்துள்ளது. தற்கால இரெவினியூ இலாகாவிலும் அப்பெயரோடு அக்கிராமங்கள் இன்றும் வழங்கப்படுவதே இதற்குத் தக்க சான்றாகும். காளிங்கரின் நன்றியுணர்வும் இதன் மூலம் நன்கு விளங்குகிறதல்லவா? நாமும் இக்குணத்தை வளர்க்க முயலுவோமாக!

காளிங்கன் தெய்வ பக்தியுடையவன் என்பதற்குச் சான்றாக பவானியில் ஓர் அம்மன் ஆலயத்தையும் எடுத்தான். அந்த ஆலயமே தற்போதுள்ள செல்லியாண்டி அம்மன் கோவிலாகும். அணைத்திறப்பு விழாவின்போது அணைத்தலைப்பில் உள்ள உத்தரராய சுவாமி கோவில் என்ற கோவிலையும் கட்டி முடித்தான். உத்தரராயன் என்னும் பெயர் வடக்கு அரசன் எனப் பொருள் தரும். பாண்டியர் தம் நாட்டின் வட பகுதியாம் கொங்கினை ஆளும் உரிமையை காளிங்கராயனுக்கே முழு அளவில்

அளித்தனர். மேலும் உத்தரராயன் உத்தர மந்திரி என்னும் பட்டங்களையும் அளித்தனர். அக்கோவிலில் உள்ள "பெத்தாரையன்" என்னும்தெய்வம் காளிங்கராயனின் தந்தையாகவும் இருக்கலாம் என்ற ஐயப்பாட்டுக் கிடமிருக்கிறது. காளிங்கராயனைப் பெற்றார் ஐயன் எனவும் விரியும். ஆண்டு தோறும் இக்கோவிலுக்கு தற்போதுள்ள இவர் பரம்பரையினரான பொள்ளாச்சி—ஊத்துக்குளி ஜமீன்தாரரின் குடும்பம் நினைவு நாள் கொண்டாடி வருவதும் இதற்குத் தக்க சான்றாகும்.

# 13. தனக்கென வாழாத பிறர்க்குரியாளர்

நம் காளிங்கராயர் வெட்டிய கால்வாய் வேலைகள் முழுதும் நிறைவேறின. அணையில் தேங்கி நின்ற தண்ணீரைக் கால்வாய் வழியாகக் கொண்டு செலுத்த வேண்டும். அதற்கு நல்லோரையும், நன்னாளும் சோதிடர் வானநூலறிஞர்கள் முதலானோர் பார்த்து முடிவு செய்தனர். அணை முடித்த நினைவாகவே பவானியில் உள்ள செல்லியாண்டி அம்மன் கோவிலையும் எடுத்து இறைவிக்கு அணைக்கட்டு நீரால் குடமுழுக்கு நன்நீராட்டு விழாவும் நடத்தியதாகவும் செய்தி வழங்குகிறது. அதே நாளில் அணைத் திறப்பு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதலில் பல சிற்றரசர் பெருங்குடி மக்கள், சூழச் செல்லியாண்டியம்மன் ஆலயம் சென்று கும்பாபிசேகத்தை முடித்து விட்டு அதே நல்லோரையில் அணைத்திறப்பு விழாவும் செய்யக் கூட்டத்துடன் அறிஞர் பலருடன் காளிங்கன் வந்தான்.

காளிங்கராயனது சுற்றத்தாரில் சுமார் 100 குடும்பங்களுக்கு மேலாக அணைத் தோப்பில்வந்து அவனுக்குஉதவிக்காகக் குடியமர்ந்தனர். அந்த இடமே தற்போதும் **காளிங்கராயன்புதூர்** என்று இன்றும் நின்று நிலவுகிறது, காளிங்கன் தன் சுற்றத்தாரை எல்லாம் அவசரமாகக் கூவியழைத்தான். நல்லோரை முடியும் முன்பே அணை

திறப்பு விழாவை முடிக்க வீட்டிற்கு ஒருவராக கடப்பாறை மண்வெட்டி, கொத்து முதலியன சகிதம் உடனே புறப் பட்டு வரும்படி கூவியழைத்தான். அவர்கள் உடனே அதற்குச் செவிசாய்த்து அவசரமாக வராமல் அறியாமை யால் சற்றுக் காலம்தாழ்த்தி வந்தனர். இதைக்கண்டு கோபம் மிகக்கொண்ட காளிங்கராயன் அவர்களைப் பார்த்து "சமயசந்தர்பத்தைப் புரிந்து கொள்ளாத நீங்கள் என்னமனிதர்கள்? சுபமுகூர்த்த வேளைமுடியுமுன் அவசர மாக வராத நீங்கள் இந்தக் கால்வாயின் பயனையும் அனு பவிக்கக் கூடாது. இந்தக் கால்வாய் நீரைப் பருகவும், இதில் விளையும் நெல்லைச் சமைத்துண்ணவும் கூடாது. "அணை பெருக! குடி அருக" என்று தனக்கும் சேர்த்து சாபமிட்டுக் கொண்டான். அதன் காரணமாகவே காளிங்கனும் அவன் சுற்றமும் வாடினர்.

இதையறிந்த மதுரை மன்னர் திருமலை நாயக்கரும் பாண்டிய மன்னர் கொங்கு பாண்டியன்—வீரபாண்டிய னும் நேரில் வந்து பார்த்தனர். கி.பி. 1264-ம் ஆண்டு இவ்வணை கட்டப்பட்டது. அதாவது வீர பாண்டியனின் 15 வது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. அவர்கள் நேரில் வந்து பார்த்து இவனது கொடைத் திறம் கண்டு மகிழ்ந்தனர்! வியந்தனர்! தனக்கென வாழாத பிறர்க் குரியாளனது உயர்ந்த பண்பை மிகவும் பாராட்டினர். காளிங்கனது குடும்பம், சுற்றம் ஆகியவர்களை குடி பெயர்ந்து வரும்படி பணித்தனர். பொள்ளாச்சியை அடுத்த ஊத்துக்குளி என்னுமிடத்தில் சுமார் ஆயிரக் கணக்கான காணி நிலங்களை சர்வ சுதந்திரத்துடன் என் றும் ஆண்டு அனுபவிக்கும் படி செய்தனர் தலை முறையினரும், வாரிசுகளும் என்றும் அனுபவிக்கலாம் என்ற பட்டயமும் வழங்கினன். காவலிக்க நாட்டின் தலைவன் ஆக்கினன்.

அதனல் வெள்ளோடை சாத்தந்தைக் காளிங்கன் ஊத்துக்குளி ஜமீன்தாரர் என்ற பட்டத்துடன் அரியணை

ஏறி அரசு செய்தான். ஊத்துக்குளி சென்றதும் காளிங்கராயன் மன அமைதிக்கு இரண்டு கல் தொலை வில் அகத்தூர் அம்மன் கோவில் என்ற ஆலயத்தை உண்டாக்கினன் மனிதர்களின் அகமாகிய மனமே இறைவன் தங்கியிருக்க ஏற்ற ஆலயமானதால் அதற் கவ்வாறு பெயர் ஏற்பட்டது மிகவும் பொருத்தமானது, அவ்வாலயத்தில் பல கல் வெட்டுக்களும், சரித்திரச் சான்றுகளும் நிறைந்துள்ளன. வாசகர்கள் நேரில் சென்று கண்டுகளித்து அனுபவிக்கலாம்!

# 14. ஊத்துக்குளி சென்றதற்குக் கூறும் வேறு காரணம்

சாத்தந்தைக் காளிங்கராயரின் இருபத்து மூன்று தலைமுறைகள் வாழ்ந்தனர். மைசூர் அரசர் சத்திய மங்கலம் முதலிய பகுதிகளை எடுத்துக்கொண்டார். அதற்காக தூதுகள் சென்றும் அதைக்கொடுத்த பாடில்லை. பவானி ஆற்றையடுத்த பகுதிகளை அவர்கள் விட்ட பாடில்லை. இதனல் மனம் நொந்த காளிங்கராயர் விஜய நகர ராயர் சமஸ்தானத்திடம் சென்று தனக்கு ஏற்பட்ட நஷ்டங்களை நேரில் விளக்கி எடுத்துக்கூற முயன்ருர்.

அவர் அங்கு சென்று இராயரைப் பேட்டி காணப் பன்னீராண்டுகள் காத்திருந்தும் பயனில்லை. மனமிக நொந்து, பெனு கொண்டம் பட்டினம் செல்லும் தெற்குத் திசை நோக்கிய பாதையில் சிறிது தூரம் சென்ருர். அங்கு ஒரு காளி கோயிலைக் கண்டார். களி பேரு வகைக் கொண்டு அக் கோவிலில் நுழைந்து ஆங்குள்ள காளியை ஆழ்ந்து தியானித்து தனக்கு ஏற்பட்டுள்ள துன்பங் களைப் போக்கியருளப் பிரார்த்தித்தார். அக்கோவிலில் மனம் சோர்ந்து படுத்துறங்க விட்டார். அவரது கன வில் காளி தேவதை தோன்றிப் பின்வருமாறு கூறியது. ''இராயரது மகன் கடந்த பன்னிரண்டு நாட்களாகவே

நோயால் பீடிக்கப்பட்டு உணர்விழந்து படுக்கையிலிருக் கிறான். இக்கோவிலில் உள்ள விபூதியைச் சிறிது எடுத்துச் சென்று படுக்கையில் உள்ள சிற்றரசனின் மீது அதைப் பூசவும், உடனே அவ்வியாதியிலிருந்து விடு பட்டு எழுவான் என்று பகர்ந்தது.

அதன்படியே செய்தான். உடனே நோயினால் பீடிக்கப்பட்ட அரசனின் மகன் குணமடைந்தான். இது தெரிந்த இராயர் மிகவும் ஆச்சரியமடைந்தார். தன் மகனைக் குணப்படுத்தியவரையும் நேரில் பார்க்க வரும் படி தக்க ஆள் அனுப்பி வரவேற்றார். தக்க சமயத்தில் இவரது குறைபாடுகளை அறிவித்தார். அவரது குறை களுக்குச் செவிசாய்த்தார். காளிங்கராயருக்கு, பெனு கொண்டா விஜயநகர ராயர் சில அரசு உரிமைகளையும் வழங்கினார். காவலிக்க நாட்டின் தலைவனாக்கினார். ஆனைமலை பகுதிகளை அரசாளும் உரிமைகளையும் அதற் கான சான்றுகளையும் செப்புப்பட்டயத்தையும் வழங்கினார்.

காளிங்கன் ஆனைமலைக் காடுகளை வெட்டி ஊராக்கி னான். அவனது ஆடுமாடுகளுக்கு குடிக்கத் தண்ணீர் உண்டாக்க ஊற்றுக்கள் பல தோண்டினார்கள். அப் பகுதியில் அந்த ஊற்றுக்களில் நீரும் பெருகின. ஊற்று கள் பல தோண்டிய குழியருகில் உண்டாக்கப்பட்ட ஊராதலின் அவ்வூர் ஊற்றுக்குழி (ஊத்துக்குழி) என வழங்கப்பட்டது. ஆங்கு நல்ல அரண்மனையுண்டாக்கி அதிலிருந்து மனு நீதியுடன் சிறப்போடு அரசாண்டார்.

மற்றொரு காரணமும் கூறப்படுகிறது. பவானியை அடுத்த ஊராட்சிக் கோட்டை மலைப்பகுதியை அரசு ஆண்ட வெள்ளை வேட்டுவ பாளையக்காரர் என்பவர் காளிங்கனை எதிர்த்தார். அணைகட்டும் போதே அம் மலைப்பகுதியிலிருந்து கல் எடுத்து வருவதைத் தடுத் தார். எனவே காளிங்கராயர் அவரை விரட்டியடித் தார். அவர் தப்பித்து ஓடிவந்து ஆனைமலைப் பகுதியில்

வாழ்ந்து கொண்டு அண்மையிலிருந்த நாட்டு மக்களுக்குத் தொல்லை மிகக் கொடுத்து வந்தார். இதுபற்றி புகார்கள் பெனுகொண்ட பட்டணத்தையாண்ட தேவ ராயருக்கு எட்டியது. வெள்ளை வேட்டுவனை அடக்கிய காளிங்கனது பெயரும் தெரிந்தது. அவ்வெள்ளை வேட்டுவ பாளையக்காரரை மீண்டும் அடக்கி ஒழிப்பதற்காக காளிங்கனை அழைத்தனர். அதற்கு நஞ்சைய காளிங்கராயரது இளைய மகனை காளிங்ககவுண்டர் என்பவரை நேரில் வரவழைத்தார். இராயர் தனது அரசவையில் அவரைக்கண்டு பேசியபின் பின்வரும் ஆணை பிறப்பித்தார்.

"ஆனைமலைக்காட்டிற்குச் சென்று மக்களுக்குத் தொல்லை பல விளைத்துவரும் வெள்ளை வேட்டுவப் பாளையக்காரனையும் அவனது வமிசத்தாரையும் அழித்து அப்பகுதியை எடுத்துக் கொள்ளவும், மலைகளை அழித்து ஊர் உண்டாக்கவும், அவ்வூரின் பாளையக்காரராக உன்னையே நியமிக்கிறேன்" என்று கூறினர்.

அவ்வாறே சென்று அவனையும் அழித்து மற்றவர்களை விரட்டியடித்து, ஊத்துக்குளி என்ற ஊரை அமைத்தார். ஊத்துக்குளிப் பாளையக்காரர் என்ற பட்டத்தையும் பெற்றார். முதல் பாளையக்காரரான, ஊத்துக்குளி சமீன்தார், நம் நாட்டில் உள்ள எல்லாப் புண்ணியத்தலங்களுக்கும் யாத்திரை சென்றார். ஆங்காங்கு ஏழை எளியவருக்கு ஏராளமான பொருளையும் வள்ளல்போல் வாரி வழங்கினர். அகத்தூரம்மன் ஆலயத்தையும் உண்டாக்கினர். தமது பாளையத்தில் உள்ள எல்லாக் குடிமக்களையும் அழைத்து ஆங்காங்கே கிணறுகளையும் கால்வாய்களையும் வெட்டச் செய்தார். விவசாயத்தை விரிவாக்கி விளைநிலமாக்கப் பெரிதும் உற்சாக மூட்டினர். மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். கிழக்கு மேற்கில் நாற்பது மைல் பரப்பையும், தெற்கு வடக்கில் இருபது மைல் பரப்பையும் உடையதாய்

அமைத்தார். வடக்கே எல்லைப்பாளையம் என்ற ஊர் எல்லையாகவும் கிழக்கில் தெலைக்கரைப்பள்ளம் என்ற இடமும், தெற்கே நல்லூருக்கு நாட்டு எல்லைவரையும், மேற்கே மணலியாற்றிலுள்ள கம்மளத்துறை என்ற இடம் வரை பரவியிருந்தது. இரண்டாவது பாளையக் காரர் முதல் எட்டாவது பாளையக்காரர் வரை எவ்வித மாற்றமும் இன்றி இராயரின் ஆணைக்கிணங்க சிறப் பாகவே ஆட்சி செலுத்தி வந்தனர்.

நஞ்சைய காளிங்கராயரின் ஆட்சிக் காலத்தில் மதுரையை விசுவநாத நாயக்கர் என்பவர் பாண்டிய அரசனுல் ஆண்டு வந்தார். எல்லாப் பாளையக்காரர்களும் சென்று அவரைக் கண்டு மரியாதை செலுத்தி வந்தனர். 5 சிற்றரசர்கள் 5 கோட்டைகளைத் திருநெல்வேலியில் கட்டினர். நாயக்க அரசனையும் அவமதித்தனர். விசுவநாத நாயக்கர் நஞ்சைய காளிங்கனை அழைத் தார். திருநெல்வேலியில் கோட்டை கட்டித் தன்னை எதிர்ப்பவர்களாகிய ஐந்து சிற்றரசர்களையும் அடக்கிவரக் கட்டளையிட்டார். நஞ்சைய காளிங்கராயர் படை யெடுத்துச் சென்று அவர்கள் கட்டிய கோட்டைகளை இடித்தார். அந்த ஐவர்களையும் வென்று அவர்களின் தலைகளை எடுத்துச் சென்று தனது வெற்றிக்கு அறி குறியாக அவைகளை விசுவநாத நாயக்கரின் முன் வைத்தார்.

விசுவநாத நாயக்கர் மிகவும் மனமகிழ்ந்து அவரது திறமையையும், பலத்தையும் பாராட்டி தனது ஐம்பத்தி ஒன்றாவது கொத்தளத்தின் தலைவனாக்கினார். மேலும் அவரது பாளையத்துக்குக் கட்ட வேண்டிய ஜாகீரை (வரிப்பணத்தை) இனிமேல் கட்டத் தேவையில்லை என்று உத்திரவிட்டார். இதன்படியே மத்துக்குளி பதினெட்டாம் பட்டத்து பாளையக்காரர் வரை நீடித் திருந்தது. மேலும் 19 முதல் 23ஆவது பட்டம் வரை உள்ளவர்கள் தங்கள் நாட்டின் எல்லைப்பகுதியான,

மதுரை, மைசூர் அரசு எல்லைகளைப் பாதுகாத்து வந்தனர்.

அப்போது மைசூரையாண்ட கிருஷ்ணராஜ உடையாரை நஞ்சைய காளிங்கராயர் நேரில் சென்று கண்டார். அப்போது குடகு நாட்டையாண்ட அரசர் மைசூர் அரசரை எதிர்த்து வந்தார். அவரையடக்கி வருமாறு மைசூர் அரசர் இவருக்குக் கட்டளையிட, அவ்வாறே ஒரு படையுடன் சென்று குடகு மன்னரை அடக்கி சிறைப் படுத்திக் கொண்டு வந்தார். மைசூர் அரசர் இவரது வீரத்தைக் கண்டு மிகவும் மெச்சி பொன்னும், மணியும், ஏராளமான பரிசுப் பொருள்களும் மகிழ்வுடன் கொடுத்தார். தான் பெற்று வந்த 750 பவுன்களையும் அவரது பாளையத்துக்கு உட்பட்ட ஒன்பது கிராமங்களுக்கு அன்பளிப்பாக வழங்கினர்.

31ஆவது தலைமுறையினரான முத்துசாமி காளிங்கராயர் என்பவர் 1832ஆம் ஆண்டு பட்டத்துக்கு வந்தார். தனது இராச்சிய எல்லைகளை மேலும் விரிவாக்கினர். ஆனைமலையில் உள்ள மார்ச்சி நாயக்கன் பாளையம் வரையும் கொச்சின் எல்லையில் உள்ள தானைய பாடம், மீனாட்சிபுரம் முதலிய ஊர்களையும் எடுத்துக் கொண்டு விரிவுபடுத்தினர். இவர் சிறுவயதாயிருக்கையில் இவரது அன்னையார் திருமதி நஞ்சாயி அம்மையார் அம்பராம்பாளையத்தில் தான் சேமித்து வைத்திருந்த தொகையிலிருந்து பெரிய மாடிக் கட்டிடங்களைக்கட்டி அவைகளைச் சத்திரங்களாக்கி அன்னதானம் செய்து வந்தார். பன்னிரண்டு வயதினரான சிறுவன் முத்துசாமியை பிரிந்து அவரது அன்னையார் 1874ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

1913 ஆம் ஆண்டில் செப்டம்பர் 21 ஆம் நாளன்று தற்போதுள்ள நம் அகத்தூர் முத்துராமலிங்க காளிங்க

ராயரின் பாட்டனுருக்கு கோவையில் மாவட்ட கலெக்டர் துரை அவர்களால் "திவான் பகதூர்" என்ற பட்டம் சூட்டப்பெற்றது. ஒரு சிறப்புப் பட்டயமும் (சன்னதும்) வழங்கப்பெற்றது. ஒரு பாராட்டும் வழங்கப் பட்டது. அவர் டெல்லியில் நடந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு கோவை மாவட்டத்தின் பிரதிநிதியாகச் சென்று வந்தார்.

இவ்வாருக நமது நூலுடைத் தந்தையும், அவரது வழித் தோன்றல்களும் சிறப்புற பூந்துறை நாட்டையும் காவலிக்க நாட்டையும் பாளையக்காரர்களாக இருந்து சிறப்புற ஆண்டு வந்தனர். முதல் காளிங்கராயரால் வெட்டப்பட்ட கால்வாய் அவர்களின் புகழ் பாடிக் கொண்டே செல்கிறது. இக்கால்வாய் மூலம் பயன் பெறும் விவசாயிகளும் இவர்களின் புகழைத் தினமும் கேட்கின்றனர், பேசுகின்றனர், மகிழ்கின்றனர். அதற்கு நன்றி செலுத்தும் முறையிலேயே நம் மதிப்பிற்குரிய மோகனராசு அவர்களைப் பாராளுமன்ற உறுப்பினராக வாக்களித்து தேர்ந்தெடுத்துள்ளனர்.

## 15. புலவர் பாடிய புகழுரைகள்

காளிங்கன் ஒரு மாபெரும் சிவபக்தன். கொங்கு ஏழு தலங்களிலும் குன்றின் மீதிட்ட விளக்குப் போல் திகழ்வது திருக்கொடிமாடச் செங்குன்றூர் என்கிற திருச்செங்கோடு. இங்குள்ள மாதொரு பங்கன் என்ற அர்த்தநாரீசுவரன் ஆலயத்திற்குக் காளிங்கன் நிலம் அளித்தும், சில பல திருப்பணிகள் செய்தும் உள்ளதாக திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை இயம்புகின்றது. அப்பாமாலையைக் கீழே காணலாம்.

1. ஆலிங்க நாகமலை அர்த்தநா ரீசரக்குக்
காளிங்க ராயன் எனும் காராளன் — மாலிங்க
மொன்றேமா மாந்தை நிலமேழு மாகொடுத்து
அன்றே புகழ் எய்தினன்.

மேலும் அணை திறந்த நாளில் பெயர் தெரியாத ஒரு புலவர் பாடிய பாடலையும் கீழே காண்க!

2. எற்று திரைப்பொன்னி கூடுறுவாணி இடைமடங்க
வெற்றி மிகுந்த அதிவீரபாண்டிய வேந்தமைச்சன்
கற்ற அறிவினன் காளிங்கராயன்செய் கால்கழிநீர்
உற்ற வனத்தை உறுவயலாக உயர்த்தியதே!

மேலும் கொங்கு மண்டல சதகத்தில்

3. காவிரி யோடுகலக்குறு வாணியைக் கட்டணைநீர்
பூவிரி செய்களுக் கூட்டிநற் காஞ்சிபுகுதவிசை
தேவர்கள் சாம்பவர் பாவானரெல்லாம் தினம்மகிழ
மாவிசயம் பெரு காளிங்க னுங்கொங்கு மண்டலமே

சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழில் காளிங்கனின் புகழ் பின்கண்டவாறு பேசப்படுகிறது.

4. பாரிற் பவம்விட் டொழிந்தகலப் பல்கால்நியமம் [பண்விலங்க
படரும் தென்காவிரிப் பெருமைபடைக்க கொங்குமிகச் [செழிக்கச்
சீரிற் பொலியும் தவமிருந்து தெய்வவாணி அணை தேக்கிச்
சிறுகால் வீசிச் சிறப்போங்க!

அணை திறந்த நாளில் மற்றுமொரு புலவர் பாடிய செய்யுளாவது

5. திரைகொண்ட வாரியை மாலடைத்தான் செழுங்காவிரியை
உரை கொண்ட சோழன் முறையடைத்தான் உலகேலறிய
வரை கொண்ட பூந்துறை நாடதுவாழப் பவானிதனை
கரைகொண்டடைத்தவன் வெள்ளோடைச் சாத்தந்தை [காளிங்கனே!

ஈரோடு - வயிராபாளையும்என்னும் ஊரில் ஒரு சமயம் காளிங்கனின் குதிரை வயலில் உள்ள நெல்லை மேய்ந்து விட்டதை பொய்யாமொழிப் புலவர் என்பவர் கண்டார். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய

வடலூர் வள்ளல் இராமலிங்கரின் உள்ளம்போல இப்புல வருள்ளமும் வாடியது. எனவே சினமூண்டதால் ஆசுகவியாக காளிங்கராயனின் குதிரை மாயும்படியாகப் பாடிய பாடலைக் காண்க!
இது தனிப்பாடல்

6. வாய்த்த வயிரபுரி மாகாளி யம்மையே!
ஆய்த்த வருகாரணி! வயலில் காய்த்த
கதிரை மாளத்தின்ற காளிங்கன் ஏறும்
**குதிரை மாளக் கொண்டு போ!**

இதைக்கண்ட காராளனாகிய காளிங்கராயரின் சினம் மிக மூண்டதைப் பார்த்தார். ஆபத்திலிருந்து தப்பிப்பிழைக்கவும் கோபமடைந்த காளிங்கரின் மனம் மாறும்படியும், குதிரை மீளும்படியும், பாடுவதே தம் கடமை என்றுணர்ந்தார். அதே புலவர் பாடிய வேறு பாடலையும் காண்போம்!

7. வாய்த்த வயிரபுரி மாகாளி யம்மையே!
ஆய்த்த வருகாரணி! வயலில் காய்த்த
கதிரை மாளத்தின்ற காளிங்கன் ஏறும்
**குதிரை மீளக் கொண்டு வா!**

என்று பாடிமுடித்ததும் குதிரையும் உயிர் பெற்றெழுந்தது, காளிங்கராயரும் மகிழ்ந்தார். இன்றும் அந்த வயிராபாளையம் என்னும் ஊரும், அம்மாரியம்மன் ஆலயமும் உள்ளது. நேயர்கள் விரும்பினால் ஈரோடு சென்று டவுன்பஸ் மூலம் வயிராபாளையம் சென்று அவ்வுண்மையையும் நேரில் காணலாம்.

## அணையைப் பற்றி

இன்றைக்கு சுமார் 708 ஆண்டுகளுக்கு முன் அதாவது கி.பி. 1264 ல் வீரபாண்டியனின் 15 ஆவது ஆட்சி

யாண்டில் வெட்டியெடுக்கப் பட்டது இக்கால்வாய், அணையும் அவ்வாண்டிலே வேலை முடிவுற்று பாசனத் துக்கு தண்ணீர் விடப்பட்டது. சுமார் 25 ஆயிரம் ஏக்கரை நன்செய் நிலமாக்கும் இக்கால்வாய் இம் மாவட்டத்திலேயே முதல் முன்னோர்த்திட்டமாய் வெட்டப்பெற்றது.

## 16. காளிங்கன் தந்தைக்குச் செய்தநன்றி

காளிங்கராயன் கட்டிய அணைக்கட்டில் அதாவது அணைத்தோப்பில் உள்ள உத்தரராயன் கோவில் காளிங்கராயரின் நினைவாக ஏற்பட்டதுவே. உத்தர ராயன் என்னும் பெயர் வடக்கு அரசன் எனப் பொருள்படும். பாண்டியர் தம் நாட்டின் வட பகுதியை ஆட்சி செய்யும் உரிமையை காளிங்கராயனுக்கே முழுமையாக அளித்தனர். ''உத்தரராயன்'' ''உத்தர மந்திரி'' என்னும் பட்டயங்களையும் அளித்தனர். அக்கோவிலில் உள்ள பெத்தாரையன் என்ற தெய்வம் காளிங்கனின் தந்தையாகவே இருக்கலாம். இதை விவரித்துப் பொருள் கொள்ளும்போது காளிங்கராயனைப் பெற்றூர் ஐயன் எனக் கொள்ளுதலே சாறும்.

தற்போதுள்ள காளிங்கனின் 38 ஆவது தலை முறையினரும் ஆண்டிற்கொருமுறை வந்து இதற்கு நினைவுநாள் கொண்டாடி வருவது பாராட்டுதற்குரியது. மேலும் காளிங்கன் தனக்கு வழி காட்டிய பாம்பின் நினைவாக ஒரு சிற்பம் எடுத்துள்ளான். அதையும் அணைத்தோப்பில் காணலாம். இதேபோல முக்கியமான மூன்று வளைவுகளிலும் கால்வாய்க் கரையில் இம்மாதிரி பாம்பின் சிற்பம் வைக்கப்பட்டுள்ளது.

முடிவுரையாக சில வார்த்தைகள். இன்றைக்கு சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் சற்றேரக் குறைய கி.பி. 1264 ஆம் ஆண்டில் இவ்வணை கட்டப்

பட்டது. அதாவது வீரபாண்டியனின் 15 ஆவது ஆட்சி வருஷத்தில் அதாவது அவர் அரியணையேறிய 15 ஆவது வருடத்தில் அணை கட்டப்பட்டது. நீளம் பொதுப் பணித்துறை அலுவலகக் குறிப்பின்படி 58 மைல், சுமார் 36 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வளமிக்க நன்செய் நில மாக மாற்றுகிறது. இவ்வணையும், கால்வாயும் 1893 ல் செப்பனிடப்பட்டது. கால்வாயும் ஆழப்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் கால்வாயில் தண்ணீர்நிறுத்திய வேனிற் காலத்தில் இதில் படிந்துள்ள வண்டல் மண்ணை எடுத்து செப்பம் செய்கின்றனர். கடல் மட்டத்திலிருந்து சுமார் 534 அடி உயரத்தில் இவ்வணை அமைந்துள்ளது. இக் கால்வாயின் கழிவுநீர் இறுதியாக கொடுமுடியை அடுத்த நொய்யல் என்ற இடத்தில் காஞ்சிமாநதி என்ற நொய்யலாற்றில் கலக்கிறது. காவிரியோடு கலக்கும் பவானி என்ற கிளையாற்றில் பிரிந்து இக்கால்வாய் அதே காவிரியோடு சேரும் மற்றொரு கிளையாறான நொய்யலில் சேருவது ஒரு வியப்பு.

கி.பி. 1800 ல் கொங்கு நாடு முழுவதும் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் சார்பில் புக்கானன் என்ற பாதிரியார் பயணம் செய்து சிறந்த பல குறிப்புகள் எழுதியுள்ளார். இதில் இக்கால்வாயை வெட்டிய காளிங்கராயரைப்பற்றியும் இக்கால்வாயைப் பற்றியும் மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளார். கால்வாய் வெட்டப் பட்ட பிறகு வெள்ளோடு என்னும் ஊர் "காளிங்க ராயன் வெள்ளோடு" என்றே வழங்கப்பட்டது என் றும் அதில் கூறியுள்ளார்.

மேலும், காளிங்கராயனைப்பற்றியும், அவனது மரபைப்பற்றியும் விவரிக்கும் பழைய காகிதச் சுவடி

ஒன்று மெக்கன்சி என்ற ஆங்கிலேயரால் தொகுக்கப் பட்டுள்ளது. இது அரசினர் சுவடிச்சாலையில் சென்னை எழும்பூரில் உள்ள மியூசியத்தில் பத்திரமாய் பாது காக்கப்பட்டுள்ளது. மேலும் கோவை மாவட்ட மான் யூவல், கெசட்டியல்களும், தனிப்பாடல்களும், கொங்கு மண்டல சதகம் போன்ற பிரபந்தங்களும் காளிங்க ராயனைப்பற்றிக் கூறுகின்றன. திரு துரைசாமி பிள்ளை என்பவரால் 1913 ல் தொகுத்த ஜமீன் வமிச புத்தகமும், திரு. S. வடிவேலுப்பிள்ளை என்பவரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற "The ruling chiefs and Zamindars of India" என்ற நூல்கள் மூலமும் காளிங்கராயனைப் பற்றியும் விரிவாகக்காணலாம். தற்போதுள்ளவர் 40ஆவது தலைமுறையினராவர். கோவை, ரேஸ் கோர்ஸ் என்ற பகுதியில் மாவட்ட ஆட்சியாளரின் பங்களாவிற்கு மூன்ருவது பங்களாவில் அதே வரிசையில் வாழ்கிருர். பண்டைய கீழ்த்திசைப் பண்போடும், மேற்கத்திய நாகரீகப் பண்புடனும் புன்னகை மிகுந்தவராகக் காட்சி யளித்தார். ஆனல் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் 39 ஆவது பட்டத்தைச் சார்ந்த A. M. R. காளிங்கராய ரின் உயிரை காலன் கவர்ந்தான்.

இன்றைய காளிங்கரின் முழுப்பெயர் அகத்தூர் முத்துராமசாமி ராமலிங்கக் காளிங்க ராயன் என்பது. மகன் மோகன்ராஜ் காளிங்கராயர், A. M. R. மோகன்ராஜ் காளிங்கராயர் M.P. என்றழைக் கப்படுகிருர். இவர் தம்மை நாடி வருவோர்க் கெல்லாம் இன்முகத்துடன் உபசரித்து ஆவன செய்து தம் முன் ஞேரின் புகழை நிலைநிறுத்தி வருகிருர். தற்போதுள்ள பழைய கோட்டைப் பட்டக்காரர் என்று வழங்குபவ

கொங்கு வேளாள சமூகத்தினரின் தலைவரான திருமிகு நல்ல சேனபதிச் சர்க்கரை மன்ருடியாரின் சகோதரி யாரை அமரர் திரு. A. M. R. காளிங்கராயர் மணந்து கொண்டுள்ளார். திருமிகு மன்ருடியார் அவர்களும் காளிங்கராயரின் சகோதரியை மணந்து கொண்டுள்ளார். எனவே கொங்கு நாட்டின் தலைவர்களான இருபெருங் குடும்பங்களும் ஒன்றுபட்டுள்ளன. காலஞ் சென்ற A. M. R. காளிங்கராயருக்கு நான்கு மகன்களும் ஒரு பெண்ணும் உண்டு.

I திரு. R. கிருஷ்ணராஜ் காளிங்கராயர்
II திரு. R. வெற்றிவேல் காளிங்கராயர்
III திரு. R. மோகன்ராஜ் காளிங்கராயர் M.P.
IV திரு. R. அருண் குமார் காளிங்கராயர்
V திருமதி சித்ரகலா ஷண்முகம்

பொள்ளாச்சியை அடுத்த ஊத்துக்குளியில் உள்ள இவர்களது அரண்மனை போன்ற இல்லம் பார்க்கத் தக்கது. அமைப்பு முறையே தனி அழகு வாய்ந்தது. நீதி செலுத்தும் நுழைவாயிலின் இருபுறமும் முருகன் கணபதி இவர்களின் தெய்வச்சிலைகளும், பின்னே ஆலயம் போன்ற அமைப்பில் பல தெய்வச்சிற்பங்களும், மயில் முதலிய தேசீயப்பறவையின் சிற்பச் சின்னமும் அமைந்துள்ளது. வாரந்தோறும் வெள்ளி, சனி, திங்கள் ஆகிய நாட்களில் பஜனையும், ஆராதனையும் நடை பெறுகிறது.

ஊத்துக்குளியில் காளிங்கராயரின் பெயரால் ஒரு அரசினர் உயர்நிலைப்பள்ளியும், பூங்காவும், ஊராட்சி மன்றமும் கவினுர அமைந்துள்ளன. இந்நூலைப் படிக்கும்

நீங்களும் ஒரு முறை அவ்விடங்களை நேரில் சென்று தவறாது கண்டின்புறுங்கள். அவசியம் சென்று பார்த்தால் தான் உண்மையை உணர்ந்து, பலருக்கும் இவ்வுண்மையைப் பறை சாற்றுவீர்கள்!

## 17. முடிவுரையில் சில கருத்துக்கள்

முற்போக்கு, முன்னேற்ற எண்ணம் படைத்த சிலர் இதைப் பொருந்தாக்கதை என்றும் கூறுவர். தனக்குத் திருமணம் செய்ய மறுத்த அத்தை மகளைப் பெண் கொள்வதற்காகக் கால்வாய் வெட்டினான் என்றும், தெய்வீக சக்தியால் சபதத்தை நினைவில் கொண்டு, அதை நிறைவேற்றவே கால்வாய் வெட்டி முடித்தான் என்றும், ஒரு பாம்பு வழிகாட்டியதைக் கொண்டு வெட்டினான் என்பதையும் மூடத்தனம் என்றும் கூறி மறுக்கின்றனர்.

இக்கால்வாப் வெட்ட உதவியவர்களைப் பற்றிய சர்ச்சைகள் பல எழுகின்றன. வெள்ளோடு சர்வலிங் கேசுவரன் ஆலயக் கல்வெட்டுக்களைப் பார்த்தபின் பல உண்மைகள் தெரிகின்றன. காளிங்கராயனின் குடியினராகிய வெள்ளோடை சாத்தந்தைக் குடியினர் இவனுக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. கம்மாளர் என்று வழங்கும் ஆசாரிகள் என்னும் குலத்தினர் காளிங்கராயனுக்குப் பல உதவிகள் செய்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக இவரது அரசரான கொங்கு பாண்டியன் என்ற வீரபாண்டியனின் உதவியும் சிறப்பான முறையில் கிடைத்தது. இவற்றின் காரணமாகவே பவானிக்கு வடக்கேயுள்ள ஊராட்சிக் கோட்டை மலையில் கற்களை உடைத்து எருமை பூட்டிய வண்டிகள்

மூலம் ஏற்றிக் கொண்டு வந்து அணையைக் கட்டினுன். கச்சிராயன், காடவராயன், விருப்பதரையன் முதலிய அரசியல் உட்படு கருமத் தலைவரின் ஆதரவும் உத வியும் கிடைத்தன.

# 18. கால்வாயைச் செப்பமிட்ட வரலாறு

சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னர் காளிங்கராயன் அணைப்பகுதியிலும், கால்வாய்ப்பகுதியிலும், பவானி யாற்றுப் பகுதியிலும் மழை மிகவும் அதிகமாய்ப் பெய் தது. அதன் காரணமாய் கால்வாயில் தண்ணீர் கட்டுக்கடங்காமல் மிகுதியாய்ப் பெருகி ஓடிற்று. எனவே கால்வாயின் சிலபகுதிகளில் கரை ஓரங்களில் உடைப்பு ஏற்பட்டு கால்வாய் நீர் முழுவதும் அதன் வழியே சென்று வீணாயிற்று. அதைத் தடுத்து நிறுத்தி கால் வாயின் வழியே தண்ணீரை ஓடும்படி செய்ய வேண் டிய அவசியமும் அவசரமுமான ஓர் நிலை ஏற்பட்டது.

அப்போது ஈரோடு வட்டம், கொடுமுடி வட்டாரம், கிளாம்பாடிக் கிராமத்தைச் சேர்ந்த வட்டக்கல் வலசு என்னும் ஊரில் பெருநிழக்காரராய் திருமிகு. அமரர் சின்னத்தம்பிக் கவுண்டர் என்பவர் வாழ்ந்து வந்தார். தற்போது அவ்வூரில் மிகச் சிறப்புற விளங்கும் 1. திரு V.S. இராமலிங்க கவுண்டர், 2. திரு. V. S. மாணிக்கசுந்தரம், 3. திரு. V. S. கைலாசம் (ஈரோடு பிக்சர் சர்க்யூட் அதிபரும், பிரபல பேங்கரும், ஆப்பக் கூடல் சக்தி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நிர்வாகியு மானவர்) 4 திரு. V.S. மணியம், 5. திரு V.S. முத்து சாமிக் கவுண்டர் ஆகியவர்களின் பாட்டனுரே அவர். இந்த சின்னத் தம்பிக்கவுண்டர் நுண்ணறிவும், தர்ம சிந்தையும், விடாமுயற்சியும், கடவுள் பக்தியும் நிறைந்த உத்தமராய் வாழ்ந்தார்.

கால்வாய் உடைப்பால் ஏற்பட்ட சேதத்தைக் கண்டு மிகவும் வருந்தினர். பயிர்கள் வாடியதைக்கண்டு உள்ளம் மிக வாடினர். வாடியபயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வடலூரார் வள்ளலின் உள்ளத்தை ஒத்த உள்ளம் படைத்தவர் எனவே உடனே மாவட்டகலெக்டருக்கு நிலை குறித்து விண்ணப்பித்தார். கால்வாயின் உடைப்புகளைச் செப்பம் செய்வதில் தமக்குள்ள ஆர்வத்தையும், தமது செல்வாக்கையும் விளக்கி எழுதினர். கலெக்டர் துரையும் இவரது தயாளகுணத்தைக் கண்டு மிகவும் பாராட்டினர். வலியமுன்வந்து உதவும் நற்பண்புக்கு மிகவும் பாராட்டி நேரில் வரவழைத்தார், ஒரு மணி நேரம் இருவருக்கும் சம்பாஷணை நடந்தது. மொழிபெயர்ப்பாளர் இருவரின் கூற்றுக்களையும் புரியும்படி செய்தனர். கருத்துக்களை தெளிவுற பரிமாறிக் கொண்டனர்.

முடிவில் கலெக்டர் துரையவர்கள் திரு. சின்னத்தம்பி கவுண்டர் அவர்களுக்கு ஒரு சாசனம் வழங்கினர். அதில் மாவட்டம் முழுவதும் எங்குவேண்டு மானலும் மரங்களை வெட்டிக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. கால்வாயின் கரை ஓரத்திலும், அருகில் உள்ள தோட்டம், காடு, இவற்றிலிருந்து பனைமரங்களையும், வேறுபல மரங்களையும் வெட்டிப்போட்டு கரையை அடைத்தார்கள். நொய்யலாற்றிலிருந்து அணைத்தலைப்புவரை சுமார் ஆறு மாத காலம் இந்த வேலை துரிதமாய் நடைபெற்றது. வேலை துரிதமாய் முடிந்தபின் கால்வாயின் தலைப்பிலிருந்து தண்ணீர் விடப்பட்டது அடுத்த போகமே தண்ணீர் விடப்பட்டு நெல் மிகுதியாய் விளைந்தது. இந்தச் செய்தியை வட்டக்கல்வலசு, வழக்கறிஞரும், பெருநிலக்கிழாருமான திருமிகு. V.S. மாணிக்கசுந்தரம் B.A.,B.L., அவர்கள் மூலம் மகிழ்வுடன் கூறக்கேட்டறிந்தார் இவ்வாசிரியர்.

நொய்யல் ஆவுடையார் பாறையில் மணியம் காளியப்ப கவுண்டர் என்ற மூதறிஞர் மேலும்சில செய்திகளைக் கூறினர். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கால்

வாயின் கழிவு நீரைப் பயன்படுத்தி விஸ்தரிப்புத் திட்டம் ஒன்றை அரசினர் கொண்டு வந்தனர். அதனுல் மேலும் சுமார் 500 ஏக்கர் நிலம் பாசனத்துக்கு வசதியாயிற்று. திரு. மணியம் காளியப்பகவுண்டரின் தந்தையார் இந்த வேலேகளை முன்னின்று நடாத்தி கழிவுநீரையும்பாசனவசதியாக்கினுர். இச்செய்தி ஆவுடையார் பாறையில் வாழ்ந்த மூதறிஞரான மணியம் காளியப்ப கவுண்டர் என்பவர் மூலம் கேட்டு எழுதப்பட்டது.

இதே போன்று விஸ்தரிப்புத்திட்டத்தில் பாகூர் அருகில் இக்கால்வாலியிருந்து ஒரு சிறு கிளைக்கால்வாய் பிரிந்து பாம்பகவுண்டன்பாளேயம் பழனிக்கவுண்டம்பாளேயம் வட்டக்கல் வழியாக சுமார் 4 மைல் தூரம் வந்து மலேயம்பாளேயம் அருகில் மீண்டும் ஒன்ருகவே இணேகிறது. இதன் மூலம் பல ஆயிரம் ஏக்கர் பாசனத்துக்குப் பயன் படுகிறது.

## வரலாற்றுச் சின்னம்

தி. மு. க. வேட்பாளர் தோழர் மோகன்ராசு காளிங்கராயர் வரலாறுஎன்றஏடு மொடக்குறிச்சிதொகுதி கிளேக் கழகங்களும், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. சின்னசாமி M. L. A. அவர்களும் சேர்ந்து ஈரோடு வரலாற்றுச் சங்க அமைப்பாளரும், கல்வெட்டு ஆராய்ச்சியாளருமான புலவர் செ. இராசு அவர்களால்எழுதி உதவியநூலிலிருந்துஎடுத்துஎழுதப்பட்டது.

## நாட்டுப் பாடல்

காளிங்கராயரைப்பற்றி ஈரோடை, பவானி வட்ட மக்களால் கிராமப் புரங்களில் பாடப்படுவது.

இந்த வள்ளல் அமரர் திரு. A.M.R. காளிங்கராயர் அவர்கள் திரு. A, M R. மோகன் ராசு M.P.

அவர்களின் தந்தை மிக உயர்ந்த உள்ளம் படைத்த உத்தமர். நடமாடும் தெய்வம் என்று நவின்ருல் அது மிகையாகாது. முகத்தில் புன்னகையுடன் கூடிய தெய்வீக களையை என்றும் காணலாம். அவரிடம் பழகியவர்கட்கெல்லாம் இவ்வுண்மை நன்கு தெரியும். சீர்திருத்தம், பொதுஉடமை, முன்னேற்றமும் முற்போக்குமான புரட்சி உள்ளம் இப்பெருந்கையார்க்கும் இவரது மைத்துனர் அமரர். பழைய கோட்டை இளைய பட்டக்காரருமான கொங்கு நாடு போற்றும் தங்கம் திருமிகு அருச்சுனன் அவர்கட்கும், தந்தை பெரியார், அறிஞர் அண்ணு ஆகியவரிடம் அன்பு நிறைந்திருந்தது. எனவே இவ்வள்ளல் அமரர் A. M. R. காளிங்கராயரும், பழையகோட்டை வள்ளல் அமரர் அர்ச்சுணன் அவர்களும், அமரர் அறிஞர் அண்ணு அவர்களிடம் அத்தியந்த நட்புக் கொண்டு ஒழுகினர். அண்ணு அவர்கள் மறைவுக்குப் பின் மாவட்டஅளவில் அண்ணு நினைவுக் குழு ஒன்று அமைத்தும், சிலை அமைத்தும், அண்ணு பெயரில் புற்றுநோய் மருத்துவமனை தோற்றுவிக்கவும், சிலை ஒன்று கோவையில் அவனுசி சாலையில் U. M. S. ரேடியோ ஹவுசுக்கு எதிரில் அமைத்தும், கலைக்கல்லூரி, நூல் நிலையங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்து நடத்தவும் திட்டமிட்டிருந்தார். அண்ணு சிலை கோவையில் அமைய மூலவராகவும் விளங்கியது இவர்களே! எனவே இவர் புகழ் வாழ்க! ஓங்குக! மனச்சாந்திபெறுக!!! என்று வாழ்த்துவோமாக.



( அமரர் )

அகத்தூர் முத்துக்கிருஷ்ணசாமி காளிங்கராயர்

(39ஆம் பட்டம்)

## பிழை திருத்தம்

| பக் | வரி. | தவறு | திருத்தம் |
|---|---|---|---|
| 36 | கடைசி வரி | முத்துராமலிங்க | முத்துராமசாமி |
| 42 | 2வது பாரா<br>2வது வரி | முத்துராமசாமி<br>இராமலிங்கக்<br>காளிங்கராயர் | முத்துராமசாமி<br>காளிங்கராயர் |
| 10.ஆம் பட்டம் படத்தின் கீழ் | | அமரர் இராமசாமிக் காளிங்கராயர் | அமரர்<br>முத்துஇராமசாமிக்<br>காளிங்கராயர் |

## காளிங்கராயன் கால்வாயைப் புகழ்ந்த வெளிநாட்டவர்கள் :

| வரிசை | வருடம் | வெளிநாட்டவர் | புகழுரை |
|---|---|---|---|
| 1 | 1800 | புக்கானர் பாதிரியார் | மிகச் சிறந்த முன்னோடித் திட்டம் |
| 2 | 1828 | மாண்ட்கோமரி | |
| 3 | 1878 | மீடுபென்னி குட்அட்ரி குழுவினர் | நவீனப் பொறியியல்களான மேனாட்டு முறைகளைப் பின்பற்றப்பட்டுள்ளன. |
| 4 | 1879 | ஸ்வார்ட்ஸ் | |
| 5 | 1880 | ராட்டன் | |
| 6 | 1883 | மார்க்கன் | |
| 7 | 1890 | ஹன்று ; வெட்டர்டன் | வடிகால் வசதி செய்துள்ளது |

### விடுபட்டோர் பெயர்கள்

(அமரர்) திருவாளர் : A. M R. காளிங்கராயரின் தம்பியர்

திருவாளர்கள் : அருணகிரி காளிங்கராயர், கதிர்வேல் காளிங்கராயர்

தமக்கை திருவாட்டி. மருத புஷ்பம்மாள் வானவராயர் அவர்கள் (சமத்தூர் ஜமீன்தாரணி)

திருவாட்டி. செண்பகவல்லியம்மன் அவர்கள் (A. M. R. காளிங்கராயரின் தாயார்)

நலமுடன் வாழும் இவர்கள் நீடுவாழ இறையருள் புரியட்டும்.

# இவ்வாசிரியரின் பிற நூல்கள்

1. அறிவுக் கோவை
2. அழகு மணிகள்
3. நட்டாற்றீசன் ஆலய வரலாறு
4. பிச்சானூரும் மாலகோவிலும்
5. பாலக்காட்டுக் கணவாய் (அச்சில்)
6. மதுக்கரை தர்மலிங்க ஈசன் தலவரலாறு (அச்சில்)

விபரங்களுக்கு :

## பாரதிப் பித்தன் பதிப்பகம்

பிச்சானூர் அஞ்சல்

மதுக்கரை (வழி) — கோயமுத்தூர்

முத்துநாராயணன் அச்சகம், ஈரோடு